விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 வைகாசி: 04 ஷவ்வால் பிறை: 22 இதழ்: 95

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 18-05-1990

## கொழும்பு-காங்கேசன் வார இறுதி ரயில் சேவை இன்றுமுதல் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

வடபகுதிக்கான வாரஇறுதி ரயில் சேவை இன்று கொழும்புக்கோட்டையிலிருந்துஆரம்பமாகிறது.

கொழும்பு கோட்டையிலிருந்து இரவு 9-00 மணிக்குப் புறப்படும் ரயில் நாளை சனிக்கிழமை காலை 6-10 மணிக்கு

(8-ம் பக்கம் பார்க்க

## தமிழ்க் குழுக்களுக்கிடையே சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அரசாங்கம்!

[கொழும்பு]

தமக்கிடையே மோதல்களை ஏற்படுத்திவரும் தமிழ் குழுக்களிடையே சமரசத்தை ஏற்படுத்தும் முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுள்ளது என்று அமைச்சரவைப் பேச்சாளர் திரு. ரஞ்சன்விஜயரத்ன தெரிவித்தார்.

(8 ம்பக்கம் பார்க்க)

## ★ 6-வது ஷரத்தை நீக்கக் கோரும்

# பிரேரணையை ஈரோஸ் விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிக்கும்

[யாழ்ப்பாணம்]

**அரசியல் அமைப்பின் ஆருவது திருத்தச் சட்டத்தை நீக்கக்கோரும் பிரேரணை ஒன்றை ஈரோஸ் அமைப்பு பாராளுமன்றத்தில் விரைவில் கொண்டுவரவுள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது**

தமிழர் உரிமையைப் பறிக்கும் இந்த ஆருவது திருத்தச் சட்டத்தை நீக்குவது பற்றிய பிரேரணைக்கு பாராளுமன்றத்திலுள்ள தமிழ் உறுப்பினர்களின் ஆதரவும் கிடைக்கவுள்ளது.

இதேவேளை தென்னிலங்கையிலுள்ள பல அரசியல் கட்சிகளை ஈரோஸ் தூதுக்குழுவொன்று ஏற்கனவே சந்தித்து தமிழர்களுக்கு இந்த ஆருவது திருத்தச்சட்டத்தினுல் ஏற்படும் விளைவுகள் குறித்து விளக்கியுள்ளது, அத்துடன் பாராளுமன்றத்தில் தம்மால் கொண்டுவரப்படும் பிரேரணைக்கு ஆதரவளிக்குமாறு ஈரோஸ் கேட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஜனநாயக அரசியல் நீரோட்டத்தில் பங்குபற்றுவதற்காக இலங்கை அரசியலமைப்பின்

(8-ம் பக்கம் பார்க்க)

## புலிகள்-ஹமீத் பேச்சுவார்த்தை 21-ம் திகதி யாழ்.நகரில் நடைபெறும்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் நீதியமைச்சர் ஜனுப் ஏ. சி. எஸ். ஹமீத்துக்குமிடையிலான பேச்சுவார்த்தைகள் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறுமெனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தைகள் இன்று நடைபெறுவதற்கு ஏற்கனவே ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோதும் விடுதலைப்புலிகள் மக்கள்முன்னணித்தலைவர் திரு.மகேந்திரராசாவும் (மாத்தயா), செயலாளர் திரு.யோரட்ணமும் (யோகி) யாழ்ப்பாணத்தில் இல்லாதகாரணத்தால் அது எதிர்வரும் திங்கட்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது,

(8-ம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரன் விடுதலை?

[கொழும்பு]

மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு. பெ. சந்திரசேகரன் நேற்று விடுதலை செய்யப்பட்டதாக ஊர்ஜிதமற்ற தகவல்கள்தெரிவித்தன.

இவரின் விடுதலையைத் தொடர்ந்து தலவாக்கொல்லையில் நிலைமை வழமைக்குத் திரும்பியுள்ளதாகவும் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

## 50 வைத்திய நிபுணர்கள் அவசரம் தேவை!

### உலக நாடுகளுக்கு இலங்கை கோரிக்கை

(கொழும்பு)

அதிவிசேட தரத்திலுள்ள ஐம்பது வைத்திய நிபுணர்களை உடன்தந்துதவுமாறு இலங்கை அரசு உலக நாடுகளிடம் அவசர கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையில் வைத்திய நிபுணர்கள் பற்ருக்குறைஅதிகரித்துள்ளதால் அண்மைக்காலச் சம்பவங்களால் நாட்டில் பாதிக்கப்பட்ட சகலபகுதிகளி

(8-ம் பக்கம் பார்க்க)

## வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தபாலகங்களில் 'பார்சல்'களை ஏற்க தொடர்ந்து தடை!

(யாழ்ப்பாணம்)

வடக்கு, கிழக்கு மாகாணங்களிலுள்ள தபால் அலுவலகங்களில் 'பார்சல்'களை ஏற்றுக் கொள்வதற்கு கொழும்பு அஞ்சல் மா அதிபர் அலுவலகம் தொடர்ந்தும்அனுமதிமறுத்து வருகிறது.

இதேவேளை கொழும்பு உட்பட ஏனைய மாகாணங்களிலிருந்தும் 'பார்சல்'கள் தபால் மூலம் வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு அனுப்பப்பட்டு வருகின்றன.

கடந்த ஏழு வருடங்களாக வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள தபால் அலுவலகங்களில் 'பார்சல்'கள் ஏற்கப்படுவதில்லை என்பது குறிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## வடபகுதி கடலில் அகதிகளும், இந்தியர்களும் கடற்படையினரால் கைது!

### கடத்தல் பொருள்களும் கண்டுபிடிப்பு!

[யாழ்ப்பாணம்]

வடபிராந்திய கடற்படையினர் வடபகுதிக் கடலில் பல லட்சம் ரூபா பெறுமதியான தென்னிந்தியாவிலிருந்து கடத்தப்பட்டுவந்த கள்ளக் கடத்தல் பொருள்களைக் கைப்பற்றினர்.

இந்திய மீன்பிடி இழுவைப் படகில் எருக்கலம்பிட்டியைச் சேர்ந்த நபரின் தலைமையில் நான்கு இந்தியப்பிரசைகள், ஜவுளித்துணிகள், சேலைகள், கணித கருவிகள், சோடாவைப் பொருள்கள், மின்சார உபகரணங்கள், பெற்ருேல்மக்ஸ் மெண்டில் ஆகியவை அடங்கிய 32 பொதிகளை தென்னிந்தியாவிலிருந்து இலங்கைக்கு கடத்திவந்தனர்.

வடபகுதி நடுக்கடலில் கடற்படையினர் இந்த கள்ளக் கடத்தலை முறியடித்தனர். இந்த ஐவரும் மற்றும் கடத்தல் பொருள்களும் காங்கேசன்துறை சுங்கவிசேட தடுப்புப் பிரிவினரிடம் கடற்படையினரால் ஒப்படைக்கப்பட்டனர். சுங்கப்பகுதியினரின் விசாரணைக்கு ஐவரும் உட்படுத்தப்பட்டனர்.

இதில் நான்கு இந்தியப் பிரசைகளும் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு அவர்களை திருப்பியனுப்புவதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் தென்னிந்தியாவிலிருந்து மீன்பிடிப்படகில்வந்த 12 இலங்கையர்கள் காங்கேசன்துறை நடுக்கடலில் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டார்கள்.

இவர்கள் வந்த படகில் நான்கு உழுந்து அரைக்கும் மோட்டார் பூட்டிய ஆட்டுக்கற்கள் காணப்பட்டன. சிறு பொதிகள் அடங்கிய சேலைகள் ஜவுளித்துணிகளும் காணப்பட்டன.

கடற்படையினர் இவர்களை

(8-ம் பக்கம் பார்க்க)

## அடகுநகைகளை அடுத்த மாத இறுதிக்குள் மீளப்பெறுமாறு அறிவிப்பு

(கொழும்பு)

யாழ். மக்கள் வங்கிக்கிளையில் அடகு வைக்கப்பட்டு இதுவரை மீட்கப்படாத நகைகளை அடுத்தமாத இறுதிக்குள் மீட்டெடுக்கவேண்டுமென அறிவிக்கப்பட்டிருககிறது.

குறிப்பிட்ட காலஎல்லைக்குள் நகைகள் மீட்கப்படாவிட்

(8-ம் பக்கம் பார்க்க)

## ஆயுதங்களுடன் தமிழ் இளைஞர் நுவரெலியாவில் கைது

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணித் தலைவர் திரு சந்திரசேகரத்திற்கும் தமிழ் தீவிரவாதகுழு ஒன்றுக்குமிடையில் நெருங்கிய தொடர்பு இருப்பதையடுத்தே அவர் கைது செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

மலையகத்திலும் வன்முறைகள் தலைதூக்கக் கூடியதோர் நிலை உருவாகி வருவதாகவும் அதற்கான பல சான்றுகள் இருப்பதாகவும் விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளதாக பொலிசார் கூறினர்.

கடந்த ஒரு வாரத்திற்கு முன்னர் நுவரெலியாதோட்டமொன்றில் வைத்து தமிழ்ப் போராளி குழுவைச் சேர்ந்த ஒரு இளைஞர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டதாகவும் அவரது விசாரணையில் பெறப்பட்ட தகவலின் அடிப்படையிலேயே திரு. சந்திரசேகரன் கைது செய்யப்பட்டதாகவும் பொலிசார் மேலும் தெரிவித்துள்ளனர்.

குறிப்பிட்ட இளைஞர்

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண விளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை (புதிய இறக்குமதி) விற்பனைக்குண்டு. பிள்ளையார், 250, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். [சி-3858]

உற்சவ தேவைக்குரிய விநாயகர், துர்க்கை அம்மன், முருகன் விக்கிரகங்கள் கோவில் பட்டுக்குடை, மணிகள், கொடிக் கம்பங்கள் விற்பனைக்குண்டு. பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3681)

### நூல்கள்

பிரபல எழுத்தாளர்களினது அனைத்துப் புதிய நூல்களும், மற்றும் றேடியோ மெக்கானிசம், வைத்தியம், தையல் கலை, சோதிடம், சமயம், சமையல், மற்றும் பல ஆராய்ச்சி நூல்கள் அனைத்தும் புதிதாக இறக்குமதியாகி விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. உங்களது அரிய நூல்களை தெரிவுசெய்து கொள்ளுங்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை, 15/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-728)

### சேவை

வீட்டுப்பாவனைப் பொருட்கள் வாங்குவதற்கும் விற்பதற்கும் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். மகாலக்ஷ்மி தளபாட நிலையம் 206, முதலாங் குறுக்குத்தெரு, ஆஸ்பத்திரிச் சந்தி, யாழ்ப்பாணம். (சி-3859)

### தேவை

ஸ்தாபனம் ஒன்றில் விற்பனையாளராக பணிபுரிவதற்கு G. C. E. (O/L) அல்லது A/L படித்தபெண்கள் தேவை. தொடர்புகொள்ளவும். மகாலட்சுமி தளபாட நிலையம், 206, முதலாம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். (சி-3860)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## மீண்டும் நிவாரணம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஊனமுற்றோருக்கும். உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினருக்குமான நிவாரம் மீண்டும் வழங்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பட்டியலில் இருந்து பொது மக்களின ஆட்சேபனை இன்றித் தெரிவான 102 பேருக்கு மேற்படி நிவாரணத்துக்கான காசோலைகள் அனுப்பப்பட்டுள்ளதாக மட்டக்களப்பு புனர்வாழ்வு அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை மரணச் செலவுக்காக வழங்கப்படும் 2000 ரூபா நிவாரணம் இனிமேல் மரணம் சம்பவித்து 14 நாட்களுக்குள் விண்ணப்பித்தவர்களுக்கு மட்டுமே வழங்கப்படவேண்டும் என்று புனர்வாழ்வு அமைச்சு அறிவித்துள்ளதைத் தொடர்ந்து காலம் தாழ்த்தி விண்ணப்பம் செய்தவர்கள் மேற்படி நிவாரணத்தைப் பெறமுடியாதநிலை ஏற்பட்டுள்ளது. (121)

# வெங்காயச் செய்கை: விவசாயிகள் பாதிப்பு

(அச்சுவேலி)

சின்னவெங்காயத்திற்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் விலையும் அதிகரித்துள்ளது. இதனால் இடைப்போக வெங்காயச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் வெங்காயச் செய்கையை கைவிட வேண்டியநிலைஏற்பட்டுள்ளது.

சின்ன வெங்காயம் கொழும்பில் கிலோ 30 ரூபாவிலிருந்து 40 ரூபாவரை விற்கப்படும். அதேநேரத்தில் உள்ளூரில் வெங்காயத்திற்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகிறது.

சித்திரை-வைகாசி இடைப்போக வெங்காயச்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் விதை வெங்காயத்தை தேடிஅலைகின்றனர்.

போதியளவு விதைவெங்காயம் கிடைக்காத நிலையும் விதை வெங்காயத்தை சேமித்துவைத்திருப்பவர்கள் கொழும்பு விலையை கருத்தில்கொண்டு அதிகவிலைக்கு விற்பனைசெய்யமறுப்பதும் விவசாயிகளை விதைவெங்காயம் தேடி அலையவைத்துள்ளது.

உள்ளூரில் 'பிடி' வெங்காயம் ஒரு அந்தர் 1300 ரூபா முதல் 1600 வரை விற்கப்படுகிறது.

விதைவெங்காயத்திற்கு பெரும் தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் ஏற்பட்டுள்ள நிலை இடைப்போக வெங்காயச் செய்கையில் ஈடுபடும் விவசாயிகளை குழப்பத்திற்குள்ளாக்கி வெங்காயச் செய்கைக்கே 'முழுக்கு' போடவைத்துள்ளது. (74)

## பண்ணிசைப் போட்டி

[உடுவில்]

இணுவில் ஸ்ரீபரராசசேகர பிள்ளையார் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு இம் மாதம் 22-ம் திகதி சங்கீத கலாநிதி நயினை திரு. நவரத்தினம் தலைமையில் பண்ணிசைப்போட்டி நடைபெறும். போட்டிகளில் பங்குபற்றுவோரின் பண்ணிசைப்பாடல்களுக்கும், பங்குபற்றுபவர்களின் சமய கலாசாரங்களை பிரதிபலிக்கும் தோற்றங்களுக்கும் விசேட புள்ளிகள் வழங்கப்பட உள்ளதாக பண்ணிசைக் குழுப்பொறுப்பாளர் திரு. மா இராசரட்ணம் தெரிவித்துள்ளார். [109]

★ இயேசு ஜீவிக்கிறார் ★

கடைசி 3 அற்புத மாலைகள்

இடம்

மானிப்பாய் செல்லமுத்து விளையாட்டு மைதானம்

திகதி : 18 - 5 - 1990 — 20 - 5 - 1990

வெள்ளி முதல் — ஞாயிறு முடிய

நேரம் : தினமும் மாலை 4-00 மணிக்கு

நற்செய்தி: செ. இராஜேந்திரம்

வியாதியா? சமாதானமில்லையா?

பிசாசின் பிடியா? என்ன பிரச்சனை?

இயேசு இலவச ஆன்மீக விடுதலை தருகிறார்.

வியாதியஸ்தருக்காக ஜெபம் செய்யப்படும்.

எல்லோரையும் அன்பாய் வரவேற்கிறோம். (சி 3867)

நாலாவது ஆண்டு நினைவஞ்சலி



செல்வி ரஜினி பாலசிங்கம்

(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி மாணவி)

மலர்வு : 27-05-1969 உதிர்வு : 31-05-1986

திதி : 18-05-1990

ஆண்டுகள் நான்கு சென்றதுவே
உன்நினை வென்றும் அகலவில்லையே
நிகழ்வுகளின் நினைவுகளில்
நிதமும் உன்நினைவ
நித்தம், நித்தம் எமைவதைக்கும் - உன்
நினைவுகள் என்றுமே அழியாது !
நீ பிரிந்து வருடங்கள் நான் காகலாம்
ஆனல்! எம் இதயங்களில் இன்றும்
நீ வாழ்கிறாய்!
வேதனைகள், சோதனைகளைத்
தாங்கித் தாங்கி - இங்கு
வெந்துகொண்டிருக்கு தம்மா எங்களிதயம்,
நீ எம்முடனிருந்த அந்த பசுமையான நாட்கள்
இங்கு பரிதவிக்கும் எங்களுக்கு ஒரு ஆறுதல்

உமது பிரிவால் துயருறும்,
அப்பா, அம்மா, தம்பி ரஞ்சித்,
உற்றார், உறவினர்கள்.

35, குருசோ வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

தி. பாலசிங்கம் (குவைஸ்) (ரஜினி கிறீம் ஹவுஸ் (சி 3868)

## தொழிற்சங்கம் அமைப்பு

(வவுனியா)

வவுனியா மாவட்டத்திலுள்ள ஒவ்வொரு சிற்றூர் அவைகளின் கீழும் தொழிற் சங்கங்கள் அமைக்கும் பணியில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினர் ஈடுபட்டுள்ளனர்.

இத்தொழிற்சங்கங்கள் மூலமாக தொழிலாளர் மேம்பாடு அவர்களின் குறைநிறைகள், சம்பளம் சம்பந்தமான பிணக்குகள் தீர்க்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

## சீரணி அந்தாதி

[நாவற்குழி]

''சீரணி அந்தாதிஎவருக்கும் விளங்கக் கூடிய முறையில் அமைந்துள்ளமை எல்லோராலும் பாராட்டத்தக்க ஒரு சிறப்பு அம்சமாகும்''.

இவ்வாறு இருபாலைக்கவிஞர் அம்பிகைதாசனின் ''சீரணி அந்தாதி' எனும் நூல் வெளியீட்டு விழாவில் கலந்து கொண்டுரையாற்றுகையில் பண்டிதர் நா.கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

திருமதி நா. சிவகுருநாதன் தலைமையில் அரங்கேறிய இந் நூற்செய்யுளை பண்டிதை பொன் பாக்கியம் ஆய்வுசெய்தார். நூற்றியொரு பாடல்களைக கொண்ட இந்நூல் ஆசிரியவிருத்தம் என்ற பாவகையில் பாடப்பட்டுள்னது. [107)

## அன்பளிப்பு

(பண்டத்தரிப்பு)

வட்டுக்கோட்டை திருஞான சம்பந்தர் வித்தியாசாலையில் சைக்கிள் தரிப்பிடம் ஒன்றை வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கம் சுமார் 20 ஆயிரம் ரூபா செலவில் அன்பளிப்பாக நிறுவிக்கொடுத்துள்ளது. (72)

0 0

(மட்டுவில்)

வலுவிழந்தோர் நலன்பேணு முகமாக இரண்டு மூன்று சக்கர சைக்கிள் வண்டிகளை சாவகச்சேரி லயன்ஸ் கழகத்திற்கு கொழும்பு கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகம் அன்பளிப்புச்செய்துள்ளது. (82)

## புதிய நிர்வாகிகள்

(புலோலி)

வதிரி தேவரையாளி யங் லயன்ஸ் விளையாட்டுக் கழகத்தின் புதிய உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்: தலைவர் சி. ஜெயரட்ணம். செயலாளர் திரு. வ. சிவராசா, பொருளாளர் திரு. த. தனகுலசிங்கம். (61)

ஃ ஃ ஃ

(மண்டைதீவு)

வான்மதி விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் மண்டைதீவு மகாவித்தியாலய மண்டபத்தில் திரு.த.பரஞ்சோதி தலைமையில் நடைபெற்றபோது நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர்: த.சிவபரஞ்சோதி, செயலாளர்: ஏ. எஸ். சோமசுந்தரம், உப தலைவர்கள்: வீ. மாணிக்கவாசகர், ச. சிவபாதசுந்தரம், உபசெயலாளர்: சி. உமாபாலன், பொருளாளர்: மா. சத்தியசீலன், கணக்காய்வாளர்: சி:ஆ.ஏகானந்தசிவம்.

ஒன்பது பேரைக் கொண்ட நிர்வாகசபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (106)

## புதிய இயக்குநர்கள்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பல.நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பின்வருவோர் புதிய இயக்குநர்களாக தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: நா. சங்கரப்பிள்ளை, உப தலைவர்; இ. அருள்நேசன், இயக்குநர்கள் பி.நிக்கிளஸ்,மு. ஜெயராஜா, செல்வி யோகராணி கோபால் இ.மரியதாஸ், வே. பொன்னையா.

## வேளாங்கண்ணி திருவிழா

(யாழ்ப்பாணம்)

கிழக்கு அரியாலை அன்னை வேளாங்கண்ணி யாத்திரைத் தல திருவிழா நாளை 19ந் திகதி சனி மாலை செபமாலையும் திருப்பலியும் தேவநற்கருணை ஆராதனையும் நடைபெறவிருக்கிறது.

நாளை மறுதினம் 20ந் திகதி ஞாயிறு அதிகாலை திருப்பலியும்காலை 7மணிக்கு திருவிழாக் கூட்டுத்திருப்பலியும் நடைபெறவிருக்கிறது. (153)

## இப்படியும் 'மோசடி'

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் புனர்வாழ்வு நிவாரணக் கொடுப்பனவு அட்டைகள் அதிகமாக வைத்திருந்த நால்வரிடம் இருந்து மேலதிக அட்டைகள் நிவாரணக் கொடுப்பனவு நேரத்தில் பறிமுதல் செய்யப்பட்டதாக புனர்வாழ்வுத்திட்டப் பணிப்பாளர் திரு. எம். எஸ். ஐரேனியஸ் தெரிவித்தார்.

வாகரை நடமாடும் செயலகத்தில் மூவரிடமும், வடமுனையில் ஒருவரிடமும் இவ்வாறு பறிமுதல் செய்யப்பட்டன என்றும் அவர் தெரிவித்தார்.

''வாகரை நடமாடும் செயலகத்தில் தலா 4000 ரூபா நிவாரணக் கொடுப்பனவு பெறத் தவறியவர்களுக்கும், வடமுனை, ஊற்றுச்சேனை நேரடி விநியோகத்தில்கொடுப்பனவு பெறத் தவறியவர்களுக்கும் விரைவில் புனையில் வைத்து நிவாரணக் கொடுப்பனவுகள் வழங்கப்படும். போக்குவரத்து வசதி அற்ற பின்தங்கிய கிராமங்களுக்கு, வங்கி அதிகாரிகள் சகிதம் சென்று நிவாரணப் பணம் வழங்கும் திட்டம் இப்பொழுது ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முதல் கட்டமாக வடமுனை, ஊற்றுச்சேனை, கிராமங்களில் மீளக்குடியமர்வு நிவாரணம் தலா 2000 ரூபா 283 பேருக்கும் தொழில் முயற்சிக்கான நிவாரணம் தலா 4000 ரூபா 176 பேருக்கும் வழங்கப்பட்டது'' என்றும் அவர் தெரிவித்தார். (121)

## கருத்தரங்கு

(நெல்லியடி)

கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அனுமதியுடன் மாவட்டக் கூட்டுறவுசபையினரால் நடாத்தப்படும் கூட்டுறவாளர்களுக்கான கருத்தரங்கு நிகழ்ச்சி நாளை 19ம் தேதி சனிக்கிழமை உடுப்பிட்டி கூட்டுவுச் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக் கருத்தரங்கில் கிளை அபிவிருத்தியில் கிளைக்குழுவின் பங்கு என்ற பொருள் பற்றி யாழ்.கூட்டுறவுஇலாகா தலைமைக்காரியாலயப் பரிசோதகர் திரு. கே. சிவகுருநாதனும் கிளைக்குழுவிற்கும் தலைமைக்காரியாலயத்திற்குமுள்ள தொடர்பு என்னும் பொருள் பற்றி திரு. எஸ். சிவசுப்பிரமணியமும், யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை செயலாளர் திரு. எஸ். சிவசுப்பிரமணியமும்,கிளைக்குழுவின் கடமைகளும்,பொறுப்புக்களும் என்ற பொருள்பற்றி யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சபை கல்வி உத்தியோகத்தர் திருமதி கே. செல்வரத்தினமும் உரை நிகழ்த்துவார்கள். (55)

# ★ படகில் சென்ற வியட்நாமிய அகதிகள் மீது 'கடற்கொள்ளையர்' தாக்குதல்:

# 66 பேர் பலி; 18 பெண்கள் கடத்தப்பட்டனர்

## மலேசிய கடலில் கொடூரச் சம்பவம்

(கோலாலம்பூர்)

மலேசியா நோக்கிச் சென்று கொண்டிருந்த வியட்நாமிய அகதிகள் படகொன்றினைக் 'கடற்கொள்ளையர்கள்' தாக்கி அதில் இருந்த 85 பேரில் 66 பேரைப் படுகொலை செய்ததுடன் 18 இளம் பெண்களைக் கடத்திச் சென்றுள்ளனர். ஒரு இளைஞர் மாத்திரம் கடலில் குதித்துத் தப்பித்துள்ளார்.

இந்தப் பயங்கர சம்பவம் கடந்த வார பிற்பகுதியில் கிழக்கு மலேசிய கடற் பிராந்தியத்தில் இடம்பெற்றுள்ளது. அப்படகிலிருந்து துணிகரமாக உயிர் தப்பிய இளைஞரை பன்னிரண்டு மணிநேரத்தின் பின் மலேசிய மீன்பிடிப் படகு ஒன்று மீட்டுள்ளது.

இச்சம்பவம் பற்றித் தப்பி வந்த நிகுஜென்இப் (வயது-29) எண்பத்தைந்து அகதிகளுடன் மலேசியா நோக்கி எமது படகு சென்றுகொண்டிருக்கையில் திடீரென இரு சிறிய அதிவிசைப் படகுகள் எங்கள் படகினைச் சுற்றி வளைத்தது. அவர்கள் கடல் கொள்ளையர்கள்.

முதலில் எம்மைத் தாக்கிப் பலவந்தமாக எம்மிடமிருந்த பொருள்களையும் மூட்டை முடிச்சுக்களையும் பறித்தனர்; பொருள்களைக் கொடுக்காதவர்கள் மீது மூர்க்கத்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர். பின் அதில் இருந்த 18இளம் பெண்களைத் தெரிவு செய்து பலவந்தமாகத் தமது படகில் ஏற்றினர்.

இதையடுத்து தாம் வைத்திருந்த கத்திகள், பொல் மற்றும் கூரிய ஆயுதங்களால் அகதிகளைத் தாக்கத் தொடங்கினர். ஒருவாறுக நான் தாககுதலிலிருந்து தப்பிக் கடலிள் குதித்துவிட்டேன். 12 மணி நேரம் கடலில் தத்தளித்து ஒருவாறு மலேசிய மீன்பிடிப் படகொன்றினுல் மீட்கப்பட்டேன். பின்னர் படகிலிருந்த அகதிகளனைவரும் கொல்லப்பட்டதாகக் கேள்விப்பட்டேன் என்றார்.

மிகக் கொடூரமான முறையில் இடம்பெற்ற இச்சம்பவம் குறித்து மலேசியப் பொலிசார் பலத்த விசாரணைகளில் ஈடுபட்டுள்ளதுடன் கடல் கொள்ளையர் கடத்திச் சென்ற 18 இளம் பெண்களையும் மீட்கும் பணியில் கடற்படையினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (சி)

---

## ஐந்து லட்சம் வங்கி ஊழியர் இந்தியாவில் வேலை நிறுத்தம்

(புதுடில்லி)

இந்தியாவில் நேற்று முன் தினம் நாடு தழுவிய ரீதியில் இடம்பெற்ற வங்கி ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் சுமார் ஐந்து லட்சம் ஊழியர்கள் கலந்து கொண்டனர். சில முக்கிய கோரிக்கைகளை முன் வைத்து இவ்வேலை நிறுத்தம் இடம்பெற்றது

சம்பள உயர்வு, மருத்துவ வசதி அதிகரிப்பு, விஷேட அலவன்ஸ் கோரியே இந்த வேலை நிறுத்தம் நடைபெற்றது. இக்கோரிக்கைக்கு சம்பநதப்பட்ட வங்கி நிர்வாகங்கள் செவிசாய்க்க மறுப்பின் மீண்டும் யூன் 8ம் திகதி வேலை நிறுத்தம் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசு சார்பு நான்கு வங்கிகளை தவிர ஏனைய பலவங்கிஊழியர்கள் இந்த வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். இதனுல் நேற்று முன்தினம் சகல வங்கி சேவைகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தது. தமது இக்கோரிக்கை விடயத்தில் கண்டிப்பான நடவடிக்கைகளை தொடர்ந்து தாம் மேற்கொள்ளவுள்ளதாகவும் ஊழியர் சங்கம் அறிவித்துள்ளது.

இவர்களது கோரிக்கைகளை சம்பந்தப்பட்ட வங்கி நிர்வாகங்கள் தற்போது ஆராய்ந்து வருவதாகவும் தெரியவருகிறது. (சி)

---

பலஸ்தீனியரின்

## பல்கலைக்கழகத்தைத் திறக்க மீண்டும் அனுமதி

(ஜெருசேலம்)

இஸ்ரேலியர் குடியேறியுள்ள பலஸ்தீனிய தாயகப்பகுதி பல்கலைக்கழகத்தை மீண்டும் திறக்க இஸ்ரேல் பிரதமர் அனுமதியளித்துள்ளார். கடந்த இரண்டரை வருடங்களாக இப்பல்கலைக்கழகம் மூடப்பட்ட நிலையிலிருந்து வருகிறது.

மேற்கு கரையோர காஷா நிலப்பகுதியில் பலஸ்தினியர்கள் கல்வி பயின்ற ஐந்து பல்கலைக்கழங்களில் முதலில் ஒன்றை மீண்டும் திறக்கவே இஸ்ரேல் அனுமதி வழங்கியுள்ளது. நிலைமையை பொறுத்தே அடுத்தவை பற்றி ஆராயப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்பல்கலைக்கழகங்களில் 14,265 பலஸ்தீனிய மாணவர்கள் கல்வி கற்று வந்ததும் குறிப்பிடத்தக்கது. (சி)

---

விலை அதிகரிப்பின் எதிரொலி:

## வெங்காயச் செய்கையில் விவசாயிகள் நாட்டம்!

(மட்டுவில்)

சாவகச்சேரியில் வெங்காயத்தின் விலை திடீர்உயர்ச்சி அடைந்துள்ளது. கடந்த இரு வாரங்களாக 1 கிலோ 30 ரூபாவாக விற்கப்பட்ட சின்ன வெங்காயம் இப்பொழுது 44 ரூபாவாக உயர்ந்துள்ளது.

இந்த விலை உயர்வுகாரணமாக வெங்காய பாவனையாளர் பெரிதும் கவலையடைந்துள்ளனர்.

இதைத்தொடர்ந்து சின்ன வெங்காயப் பயிர்ச்செய்கையாளர் வெங்காயப் பயிரிடுகையில் சுறுசுறுப்படைந்துள்ளனர்.

இந்தப்போகத்தில் உப தானியப் பயிர்ச்செய்கைக்குப் பதிலாக வெங்காயச்செய்கையையே விவசாயிகள் மேற்கொள்ளவுள்ளனர். (82)

---

காஷ்மீரில் இந்திய

## இராணுவ முகாமில் பெரும் தீ விபத்து

(ஸ்ரீநகர்)

ஜம்மு;காஷ்மீர் தலைநகர் ஸ்ரீநகரில் இந்திய இராணுவ முகாமொன்றில் பெரும் தீ விபத்தொன்று இடம்பெற்றுள்ளது. இத்தீயைஅணைக்கும் முயற்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் ஈடுபட்டனர். எனினும் இழப்புகள் சேதவிபரங்கள் குறித்து இதுவரை எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஸ்ரீநகரில் பலத்த பாதுகாப்பின் மத்தியிலுள்ள இந்த இராணுவமுகாமில் தீ விபத்து ஏற்பட்டதற்கு நாசவேலை காரணமிருக்காதென்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இதுபற்றி உடனடியாக விசாரணை நடாத்தவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இராணுவ முகாமின் எண்ணை நிரப்பு நிலையத்தில் இத் தீ ஆரம்பித்துபரவியதாக தெரிவிக்கப்படுகிறது. சுமார் 5 மணி நேரம் இதனை கட்டுப்படுத்த இராணுவத்தினர் பெரும் பிரயத்தனம் மேற்கொண்டனர்.

காஷ்மீர் தீவிரவாதிகளோ அதன் ஆதரவாளர்களோ இதற்கு காரணமாயிருக்க முடியாதென்றும் தற்செயலான தீ விபத்தாயிருக்கலாமெனவும் இராணுவ வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (சி)

---

## "அரச ஊழியர்கள் மக்கள்சேவகர்கள்"

(உடுவில்)

'அரசாங்க உத்தியோகத்தில் உள்ளவர்கள் மக்களின் சேவகர்கள், மக்கள் யாவரையும் ஒரே கண்கொண்டு நேசிப்பவர்கள். மக்களுக்கு தேவையான சகல உதவிகளையும் செய்து கொடுப்பதன் மூலம் மக்களின் நண்பர்களாகவும் சேவகர்களாகவும் விளங்குகின்றார்கள். கிராம மக்களுக்கு தம்மால் இயன்ற உதவிகளை செய்து கொடுப்பதன் மூலம் அவர்கள் மக்கள் மனதில் நிலைபெறுகிறார்கள்'.

வலிகாமம் தெற்கு உடுவில் உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. மகாலிங்கம், கந்தரோடை கிராம சேவையாளர் திரு. க. வேலும்மயிலும் ஆகியோர் இடமாற்றம் பெற்றமையை தொடர்ந்து அவர்களுக்கு அளிக்கப்பட்ட சேவை நலம் பாராட்டு விழாவில் தலைமையுரையாற்றிய ஆசிரியர் திரு. க. புவனேந்திரநாதன் இவ்வாறு கூறினார்.

சந்தரோடை சுப்பிரமணியம் வாசிகசாலையில் அவ்வூர் மக்களால் இருவருக்கும் பாராட்டுவிழா எடுக்கப்பட்டது.

கந்தரோடை உபதபால் அதிபர் திரு. ஆ. சி. கணேசவேல் உரையாற்றுகையில் கூறியதாவது:

இன்று மக்களால் பாராட்டுப் பெறும் கிராம சேவையாளரும், உதவி அரசாங்க அதிபரும் இக்கிராம மக்களின் அவசிய தேவைகளை அறிந்து அவற்றை நிறைவு செய்வதில் முன்னின்று உழைத்தவர்கள்.

(5ம் பக்கம் பார்க்க)

---

## லண்டனில் தொடர் குண்டு வெடிப்பு ஐந்து இராணுவத்தினர் பலி

### ஐ. ஆர். ஏ. கெரில்லாக்கள் கைவரிசை

(லண்டன்)

லண்டன் மாநகரிலும், அதையொட்டிய நகரங்களிலும் கடந்த சில தினங்களாக குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம்பெற்று வருகின்றன. இவ்வாறான சம்பவங்களில் ராணுவத் தினர் ஐவரும், சில பொதுமக்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன் தினம் லண்டனில் வடமேற்குப்பகுதியில் அமைந்துள்ள ராணுவத் தலைமைப் பணியகத்தருகே பாரிய குண்டொன்று வெடித்துள்ளது. இதனுல் பல வீடுகளும், கடைகளும், கார்களும் பலத்தசேதமடைந்தன. ராணுவ வீரர் இருவரும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஐ ஆர். ஏ. என அழைக்கப்படும் 'ஐரிஷ்' கெரில்லாக்களே இக் குண்டுவெடிப்புகளுக்கும் பொறுப்புஎன ராணுவத்தினர் தெரிவித்துள்ளனர். கடந்த மாதமும் தொடச்சியான குண்டுத் தாக்குதல்களை இவர்கள் மேற்கொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்றுமுன் தினம் கெரில்லாக்களின் மறைவிடம் ஒன்றை இராணிவத்தினர் தாக்கியதில் ஐந்துபேர் கொல்லப்பட்டதாகவும், பல ஆயுதங்கள் மீட்கப்பட்டதாகவும் ராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

### மணிவாக்கு

''உனக்குச் சிறந்த அறிவுரை கூறக் கூடியவர் உன்னைத் தவிர வேறு யாரும் இல்லை. - ஆன்ரோர் வாக்கு.

## நமது நோக்கு

# கிணறு வெட்ட - பூதம் புறப்பட்டது!

''கிணறு வெட்டப பூதம் புறப்பட்டது போல'' என்பது தமிழிலேயுள்ள உவமைத் தொடர்.

கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டிருக்கின்றது சாவகச்சேரியில்.

நடந்ததென்ன? சாவகச்சேரி அரசினர் வைத்திய சாலைக் கிணற்று நீர் அங்குள்ள நோயாளிகளுக்கும் ஊழியர்களுக்கும் நாளாந்தத் தேவைக்குப் போதாமல் இருந்தது.

குடிநீர்ப் பற்றுக்குறையைப் போக்க அந்த நன்னீர்க் கிணற்றுக்குள் குழாய் அடித்திருக்கிறார்கள்,

இதற்கு 4600 ரூபா செலவும் ஏற்பட்டிருக்கின்றது; தேவைக்கதிகமான நீர் பெருக்கெடுத்தது உண்மை தான்.

ஆனால், அந்த நீர் உவர் நீராக மாறிவிட்டது நன்னீரைப் பெருக்கவென ஆழமாக்கப் போக உவர் நீர் என்ற பூதம் புறப்பட்டிருக்கின்றது!

இந்த நிகழ்ச்சி எல்லோருக்கும், குறிப்பாக யாழ். குடாநாட்டு மக்களுக்கு நல்லதோர் பாடமாக அமைய வேண்டும்.

பல புவியியலாளர்கள் குடாநாட்டு நீர்வளம் குன்றி வருவதை அடிக்கடி சுட்டிக்காட்டி வந்துள்ளார்கள்.

வெளிநாட்டு நிபுணர்கள் வந்து, ஆராய்ந்து, நீர்ப் பாவனையின் கட்டுப்பாடு பற்றியும் மழைநீர் சேகரித்தல் பற்றியும் அறிக்கைகள் மூலம் எச்சரித்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள்!

ஆனால் இவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்கொலியாயிற்று.

மக்களின் கவனக்குறைவால், அறியாமையினால், சுயநலப் போக்கால் குடாநாடு முழுவதுமே பாலைவனமாகப் போகின்றது.

மழை நீரைத் தேக்கிவைக்க அவ்வப்போது தொடக்கப்பெற்ற சிறு முயற்சிகள் தொடரப்படவில்லை!

இதேவேளை, மழைநீரைக் கடலுக்குச் செல்லாது தடுத்து சேமித்து வைக்கும் திட்டமொன்று பரீட்சார்த்தமாகச் செயற்படுத்தப்படுவதாகச் செய்திகள் கூறுகின்றன.

குறிகாட்டுவான் பகுதியில், ஒரு மைல் சுற்றுட்டலில் இந்த ஆய்வு நடைபெற்றுவருகின்றது.

கடலோரத்தில் நிலப் பகுதியைச் சுற்றி, ஒன்றரை அடி உயரம் முதல் கடல் மட்டத்தின் கீழ் ஒன்றரை அடி ஆழம் வரை பொலித்தீன் பதிக்கப்பட்டுள்ளது.

இதனூடாக, அல்லது மூன்றடிக்குக் கீழாகக் கடலுள் மழைநீர் சேர்கின்றதா என ஆராயப்படுகின்றது.

இத் திட்டம் பயனளித்தால் ஆய்வு முடிவுகளின்படி மேலும் பல இடங்களுக்கு இந்த நீர் சேமிக்கும் திட்டம் விரிவுபடுத்தப்படும்.

இதுபோன்ற பல ஆய்வுகளும், நீர் சேமிக்கும் திட்டங்களும் உடனடியாக செயற்படுத்தப்படாவிட்டால் நீர்ப் பற்றுக்குறை ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

போர் நடவடிக்கைகளாலும் பொருளாதாரச் சீரழிவுகளாலும் ஏற்கனவே வாடியிருக்கும் பொது மக்களுக்கு நீரும் வற்றி குடிநீருக்கே அலையும் துன்பம் வரக்கூடாது.

பொதுநலத் தொண்டர் நிறுவனங்களும் தலைவர்களும் மக்களிடம் நீர்ப் பாதுகாப்புப் பற்றிய விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தவேண்டும்.

# ஜப்பான் பணத்திற்காக சமயத்தை விற்க முடியாது; வெட்கக்கேடானது!

## விபாசி தேரர் கிளப்பிய சர்ச்சை!

தென்னிலங்கைப் பௌத்தர்களிடையே இன்று பெரிய சலசலப்பு ஏற்பட்டிருக்கின்றது.

ஜப்பானுக்குச்சென்ற வண. பெல்பொல விபாசித் தேரர், அந்த நாட்டிற் பின்பற்றப்படும் மஹாயான பௌத்தத்தின் ஹின்சஸ் பிரிவின் பிக்குவாக மாறியுள்ளார்.

அவர் இம்மாதம் 27-ம் திகதி நாடுதிரும்பி வரும் போது அரசு எவ்வித வரவேற்பிலும் ஈடுபடக்கூடாது என இந்நாட்டின் பெரும்பான்மையாகப் பின்பற்றப்படும் தேரவாதப் பௌத்தர்கள் எதிர்ப்புக் குரல் கொடுத்திருக்கிறார்கள்.

''விபாசி மஹாயானப் பிரிவிற் சேர்ந்தது பௌத்த சாசனத்தையும் மகாசங்கத்தையும் அவமதிக்கும் செயலாகும்!'' எனக் கோட்டை சிறீகல்யாணி தர்ம மகாசங்கத் தலைவர் கண்டித்திருக்கிறார்.

''பௌத்தம் இலங்கையில் தான் தூய்மையாக இருக்கும்; ஏனென்றால் அவர்கள் தான் பௌத்த கோட்பாடுகளைப் பூரணமாக விளங்கிப் பின்பற்றும் ஆற்றல் உள்ளவர்கள்!'' எனப் புத்தபகவான் இறக்குமுன் சொன்னதாகக் கூறிக்கொள்கிறார்கள். எனவே புத்தரின் இந்த நம்பிக்கைக்கு மோசம் செய்யக் கூடாது என்பது அவர்கள் வாதம்.

''ஜப்பானின பணத்திற்காக எமது சமயத்தை விற்ற முடியாது; இது வெட்கக் கேடானது!'' என்கிறார்கள் எதிர்ப்பாளர்கள்.

''ஜப்பான் பணத்தைத் தருவதோடு தனது பண்பாட்டையும் சமயத்தையும் விற்க முற்படுகின்றதா?'' எனக் கேட்டிருக்கிறார் கலாநிதி பெல்லாவில விமலரத்தின. யாரிவர்? தலைமைப்பிக்குவான இவர் ஜெயவர்த்னபுர பல்கலைக்கழக விரிவுரையாளர்.

இலங்கை அரசியற் சட்டத்தின் இரண்டாம் அதிகாரத்தில் பௌத்தத்தையும், பௌத்த சாசனததையும் பேணிக்காக்கும் பணியும் அரச கடமைகளில் ஒன்றாக விதிக்கப்பட்டிருக்கின்றது,

இக்கடமையைச் செய்யும் ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டிருக்கின்றது, தேரவாத பௌத்தத்தைக் காப்பாற்ற!

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, தேரவாதத்திற்கும் மஹாயானத்திற்குமிடையே போட்டி இருந்துள்ளது. வரலாற்றிலே, அநுராதபுரிக் காலத்திலே, தேரவாதப் பிரிவைச் சேர்ந்த மகாவிகாரையினருக்கும், மஹாயானப் பிரிவைச்சேர்ந்த அபயகிரி விகாரையினருக்கும் போட்டி நிலவியது. ஆனால் தேரவாதமே இங்கு நிலைத்தது. உலகின் பல பாகங்களில் மஹாயானமே பிரசித்தி பெற்றுள்ளது.

ஆதிகாலத் தூய்மையோடும், ஆதிகால முறைகளோடும் தேரவாதமே பௌத்தத்தைச் சிறப்பாக இலங்கையில் அரச ஆதரவோடு பேணி வருகின்றது எனக் கூறுகிறார்கள்.

மஹாயானப் பிரிவை ஏன் எதிர்க்கிறார்கள்? அந்தப் பிரிவிற் கட்டுப்பாடுகள் அதிகமில்லை. பௌத்த குருமார் திருமணம் செயலாம். ஜப்பானிற் பல பௌத்த குருமார்கள் திருமணம் செய்துள்ளார்கள்; பௌத்த கோவில்கள் தகப்பனிடமிருந்து மகனுக்குப் பரம்பரைச் சொத்தாகக் கைமாறுகின்றது.

வண. விபாசி தேரர் கூறுவது என்ன? ''அரசியல் சட்டம் உறுதிப்படுத்தும் மனித அடிப்படை உரிமையின்படி நான் எந்தப் பிரிவையும் சேரலாம். தேரவாதப் பௌத்த விகாரைகள் பல ஜப்பானியப் பணத்தினாற் புதுப்பிக்கப்பட்டுள்ளன. ஜப்பானிய மஹாயானப் பிக்குகள் இங்கு வந்தபோதெல்லாம் கௌரவிக்கப்பட்டிருக்கிறார்கள். எனக்கு மாத்திரம் இந்த எதிர்ப்பு ஏன்?''

அவர் ஜப்பானிலிருக்கும் போதே கோட்டைப் பிரிவு சங்கசபை அவரைத் தமது சபையிலிருந்து வெளிற்யேறியுள்ளது.

உலகப் பௌத்த காங்கிரஸ் இரு பிரிவினர்களுக்கிடையிலும் நெருங்கிய உறவுகளை ஏற்படுத்தி வந்துள்ளது 1950 இல் அதன் மகாநாடு இலங்கையில் நடைபெற்றபோது ஒற்றுமை பற்றி அதிகம் பேசப்பட்டது.

ஆனால், விபாசி தேரர் மஹாயானப் பிரிவிற் சேர்ந்ததும் அவர்களாற் பொறுத்துக்கொள்ள முடியவில்லை.

அண்மையில் இங்கு வந்து போன ஜப்பானியப் பிரதமர் கைபூ அவர்கள் மனித உரிமைகள் பற்றிப் பேசியது எரிகிற நெருப்புக்கு எண்ணெய் ஊற்றியது போலாகிவிட்டதா?

மூ. சி.

## கைத்தொழில் பயிற்சி

(உடுவில்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பின்தங்கிய கிராமப்புறங்களில் உள்ள யுவதிகளுக்கு யாழ்ப்பாணம் செஞ்சிலுவைச் சங்கம் யாழ்ப்பாணம் பனை அபிவிருத்திச்சபையுடன் இணைந்து பனைவளம் சம்பந்தமான கைத்தொழிற் பயிற்சியொன்றினை வழங்க முன்வந்துள்ளது.

(109)

## சமயத்தை விளங்க வேண்டாமா?

### (1) நமிநந்தி செய்த தொண்டு என்ன?

சோழநாட்டிலே வாழ்ந்த நமிநந்தி அரநெறி என்னும் கோவிலுக்குப் போன போது அந்திமாலை ஆனது. விளக்கேற்ற விரும்பினார். நெய்இல்லை. நெடுந்தூரத்திலுள்ள வீடு போய்வர நேரம் போதாது.

எனவே அருகிலிருந்த வீடொன்றில் நெய் கேட்டார்; அவர்கள் சமணர்கள் ஆனபடியால், ''இங்கு நெய் இல்லை, குளத்திலே நீருண்டு, அதை விளக்கிலே விட்டு எரியும்'' என்றிருக்கிறார்கள் கேலியாக.

இவருக்கு வேதனையதிகரித்தது. இறைவனது சந்நிதியிலே விழுந்து வணங்கினார். ''குளத்து நீரையே ஊற்றி விளக்கை ஏற்று'', என அசரீரி வாக்குக்கேட்டது.

அவ்வாறே செய்தார்; பலரும் அதிசயித்து நின்றார்கள்.

### (2) பஞ்சாமிர்தம் என்றால் என்ன?

தேன், நெய், சர்க்கரை, தயிர், பால் ஆகிய ஐந்தும் சேர்ந்தது பஞ்சாமிர்தம். இக்காலத்தில் பல பழவகைகளையும் சேர்த்துக் கொள்கிறார்கள்.

### (3) ஆவாஹனம் என்றால் என்ன?

பூஜை செய்யுமுன், இறைவனை வந்து தங்கும்படி பிரார்த்திப்பதே ஆவாஹனம் என்கிறார்கள்.

விக்கிரகம், படம் அல்லது கலசம் ஆகியவற்றிற்கு மந்திரம்அல்லது சுலோகம் சொல்லி, பூ, அட்சதை ஆகியவற்றைச் சேர்ந்து பிரார்த்திப்பார்கள்.

தொகுப்பு :
சி. கலையரசி.

## பலதும் பத்தும்

### ஆந்தைகளை ஆதரியுங்கள்

இரவிலே நடமாடும்வட்ட முக 'அழகிய' ஆந்தைகளைக் கெட்ட சகுனமாகக் கருதுகிறார்கள்.

பிரயாணத்திற்கு விலக்கப்பட்ட கெட்ட சகுனங்களில் ஒன்று ஆந்தை வலம் போதல் என்கிறது வாக்கிய பஞ்சாங்கம்;

ஆந்தையைக் கனவிற் கண்டால்...? எடுத்த காரியம் தடைபட்டு நட்டம் ஏற்படுவதாகவும் அதன் குரலைக் கேட்டதாகக் கனவு கண்டால் நோய் வருவதின் அறிகுறி என்றும் ''கனவு நூல் திறவுகோல்'' என்ற நூல் தெரிவிக்கின்றது,

இந்தக்கனவு நூலை எழுதியவர் சாதாரணமானவரல்ல: சென்னை கிறிஸ்தவக் கல்லூரி முன்னாள் தமிழாசிரியர் சி. பார்த்த சாரதி ஐயங்கார்.

பங்களாதேஷிலும் ஆந்தைகளைத் துர் அதிர்ஷ்டமுள்ளவைகள் என்றே மக்கள்-நம்புகிறார்கள்.

ஆனால், ஆந்தைகளின் நன்மை பற்றி டாக்கா பல்கலைக்கழகப் பேராசிரியர் நூர் ஜஹான் சர்க்கார் ஆய்வு செய்திருக்கிறார். ஒரு ஆந்தை தினசரி இரண்டு எலிகளையும் பயிரை அழிக்கும் பூச்சிகளையும்உண்கின்றதாம்!

இதனால், ஒரு வருடத்தில் ஒரு குறிப்பிட்ட வயலில், 3000 டொலர் பெறுமதியான நெல்லைக் காப்பாற்ற ஆந்தை உதவுகின்றதாகக் கணக்கிட்டிருக்கின்றார்.

எனவே, விவசாயிகள் பானைகளை மரத்திலே அல்லது மூங்கில் தடிகளிற் கட்டி ஆந்தைகள் இனம் பெருக்க உதவுகிறார்களாம்!

வாணி

## நரசிங்க வயிரவர்

வயிரவப் பெருமான் சிவனது அம்சமாகத் திகழ்பவர். சிவபெருமானின் இரண்டாவது புத்திராக அவதரித்தவர். தெல்லிப்பழை - மகாதனை - கோணசீமா என்னும் காணிக்குள் உள்ள நரசிங்க வயிரவ சுவாமியின் மகிமை அளவிடற்கரியது. இற்றைக்கு ஏறக்குறைய ஒரு நூற்றாண்டிற்கு மேலாக இவ்வாலயம் சீரும் சிறப்பும் பெற்று விளங்குகின்றது. ஆதியில் நரசிங்கர் என்னும் பெரியார் வேறு இடம் சென்றபோது அவருடன் வயிரவப் பெருமான் தொடர்ந்து வந்ததாகவும், பின் அப்பெரியார் மூலம் கோவில் அமைக்கப்பட்டதாகவும் மூதாதையர் மூலம் அறியமுடிகின்றது.

முதற் கும்பாபிஷேகம் நடந்தது. எப்போது என்பதை நம்மால் அறியமுடியவில்லை. இரண்டாவது கும்பாபிஷேகம் எந்தையராது காலப்பகுதியில 7-4-47-ல் சிறப்பாக நடைபெற்றது. சென்ற 83-ம் ஆண்டிலே சைவமக்கள் ஒன்று சேர்ந்து திருப்பணிகளை நிறைவேற்றினார்கள். மூன்றாவது கும்பாபிஷேகம் 9-6-85-ல் பஞ்சகுண்டம் அமைத்து ஐந்து சிவச்சாரியர்களின் தலைமையில் விமரிசையாக நடைபெற்றது. தொடர்ந்து நித்திய நைமித்தியங்கள் வழுவின்றி நடைபெற்று வருகின்றன. மேற்படி வயிரவப்பெருமானின் ஐந்தாவது மணவா

(6ம் பக்கம் பார்க்க)

# "பெற்றோரை மதித்து மரியாதை செய்யவேண்டும்"

(உடுவில்)

'நாம் ஒவ்வொருவரும் சிறு வயது முதலே எமது பெற்றோரை நேசிக்கப் பழகவேண்டும். அவர்களை மதித்து மரியாதை செய்து அவர்களுக்கு பணிவிடை செய்யவேண்டும்.

பகவான் பாவாமங்களநாட்களில் கொண்டாட்டங்களில் கலந்து கொள்வதற்கு முன்னர் தமது பெற்றோரின் சமாதியை தரிசித்துவிட்டு செல்லும் தன்மை எம்மையும் பெற்றோரை கனம் பண்ணும் தெய்வீகப் பாதையில் இட்டுச் செல்ல வைக்கின்றது.

இவ்வாறு சித்தங்கேணியில் நடைபெற்ற சத்தியசாயி பாபா சேவா சமித்தியினரால் கொண்டாடப் பட்ட ஈஸ்வராம்பதின விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் திரு. எஸ். கனகரத்தினம் கூறினர்.

சாயிபாபா சமித்தியின் தலைவர் திரு. கே. சிவராசா ஈஸ்வராம்பாதின விழாவினைக் கொடியேற்றி ஆரம்பித்து வைத்தார்.

அவர் தமது உரையில் கூறியதாவது: பிறந்த ஒவ்வொருவரும் இவ்வுலகில் இறந்தேயாக வேண்டும். இறப்பை வெல்லக்கூடிய சக்தி எம்மில் எவரிடமும் இல்லை இருப்பினும் மரணம் எம்மை வந்தடையும் கடைசி நேரத்திலும் கூட நாம் பகவான் நாமத்தை உச்சரிக்கத் தவறக் கூடாது என்றார்.

மாவட்ட அமைப்பாளர் திருமதி தனசிங்கம், திருமதி தி. நவரட்ணராயா ஆகியோரும் உரையாற்றினர். (109)

# மாணவர்கள் ஒவ்வொருவரும் தொழிற் பயிற்சி பெறவேண்டும்"

(உடுவில்)

''பாடசாலையை விட்டு விலகும் ஒவ்வொரு மாணவரும் தமக்கு இயைந்த ஒரு தொழிலில் பயிற்சி பெறவேண்டும். அப் பயிற்சியை அடிப்படையாக வைத்து சுயதொழில் ஒன்றை அமைத்துக்கொண்டு தனது வாழ்க்கைக்கேற்ற ஊதியத்தை பெற்றுக்கொள்ள வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு இளைஞர்களும் தமது பொருளாதார நிலையை ஸ்திரப்படுத்திக் கொள்வதுடன் நாட்டின் பொருளாதார நிலையையும் உயர்த்தவேண்டும்.

இவ்வாறு யாழ்ப்பாணக் கல்வி திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவு பொறுப்பதிகாரியும் தொழில் நுட்பப்பாடக் கல்வி அதிகாரியுமான திரு. எஸ் சுப்பிரமணியம் கூறினர்.

இணுவில் சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில், முறைசாராக்கல்! தொழிலகத்தையும், உடையமைத்தலும் கற்கை நெறிகளில் கடந்த ஆண்டு சித்தியடைந்த மாணவிகளுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராககலந்துகொண்டு அவர் உரையாற்றினர்.

சைவப்பிரகாச வித்தியாசாலை அதிபர் திரு. அ. கமலநாதன் மேற்படி வைபவத்துக்கு தலைமை வகித்தார்.

கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் மேலும் கூறியதாவது: முறைசாரா கல்விப் பிரிவின் திட்டமிடப்பட்ட நோக்கம் சரியாக நிறைவேற்றப்படாத பட்சத்தில் முறைசாராக் கல்விக்கென வெளிநாட்டவர்களால் வழங்கப்படும் உதவிகள் குறைக்கப்படும். அப்போது நாமும் எமது கற்கை நெறிகளையும், பயிற்சியாளர்களையும்குறைக்க வேண்டியோ, நிறுத்த வேண்டியோ ஏற்படும். எனவே, நல்ல நிலையில் இயங்காத எந்த ஒரு முறைசாரா கல்விக் கற்கை நெறிகளும் மூடப்படும். மூடப்படும் கற்கை நெறிகள் தேவைப்படும் இன்னோர் இடத்துக்கு கொண்டு செல்லப்படும். ஆசிரியர் நிலையம், மாணவர் எவராயினும் சரி முறையாக - சீராக இயங்கவில்லை எனக்கண்டால் மேற்கண்ட எந்த ஒரு முடிவையும் மேற்கொள்ள எமக்கு பூரண அதிகாரம் தரப்பட்டுள்ளது.

இப்பகுதியில் கடந்த வருடம் நடைபெற்ற பயிற்சிநெறிகளில் தேறியோர் தாம் கற்ற பயிற்சியைகொண்டு தொழிலை அமைத்துக் கொள்ளாமை வேதனைக்குரிய செயலாகும். இப்பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கம் போன்றோர் இக்கற்கை நெறியில் கூடிய அக்கறை கொண்டு செயல்பட்டுள்ளார்கள். இருப்பினும் இப்பயிற்சியை முடித்துக்கொண்டவர்கள் சுய தொழிலை தேடிக் கொள்ளாமல் சான்றிதழ்களை மட்டும் பெற்றுக்கொள்வது அவர்களின் முயற்சிகளை நாம் அளவீடு செய்ய முடியாமல் செய்து விடுகின்றது.

கடந்த ஆண்டில் பயின்றவர்களில் 25 வீதமானவர்களே தொழில் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பது நாம் எதிர்பார்த்த பலனை அளிக்கவில்லை என்றே கருத வேண்டும்.

அடுத்த ஆண்டுமுதல் முறைசாரா கற்கை நெறிகளில் பங்குபற்றி சுயமாக தொழில் வாய்ப்பை தேடிக்கொண்ட உறுதிப்படுத்தப்பட்டவர்களுக்கு மட்டுமே சான்றிதழ்கள் வழங்க நடவடிக்கை எடுக்க உள்ளேன்.

நாம் ஒரு பிள்ளைக்கு ஆயிரம் ரூபா வீதம் செலவிட்டு பயிற்சியளிக்கும் நோக்கம் அவர்கள் சுயதொழில் மூலம் ஐநூறு ரூபாவையாவது சம்பாதிக்க வேண்டும்என்பதாகும். மாதம் நூறு ரூபா கூட உழைக்க முடியாத பல பிள்ளைகள் பின் தங்கிய இடங்களில் பலர் உள்ளனர். இப்பகுதியில் இக்கற்கை நெறி வெற்றியளிக்கவில்லையாயின் அது அடுத்த வருடம் முதல் பின் தங்கிய கிராம பிள்ளைகளின் இடத்துக்கு கொண்டு செல்ல நடவடிக்கை எடுக்கப்படும்.

அதிபர் ஆ. கமலநாதன் உரையாற்றுகையில் கடந்த ஆண்டு நாட்டில் நிலவிய சீரற்ற நிலைபயிற்சிபெற்றமாணவிகளுக்கு சுயதொழிலில் ஈடுபடும்வாய்ப்பைதடைசெய்திருந்தது என்று எதிர்காலத்தில்

(7-ம் பக்கம் பார்க்க)

# மறியல் போராட்டத்தின் எதிரொலி: வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்துக்கு அதிபர் நியமிக்கப்பட்டார்

(வவுனியா)

வவுனியா தமிழ் மகாவித்தியாலய மாணவர்களுக்கு இதுவரை தலையிடியாக இருந்து வந்த அதிபர்பிரச்சனை சுமுகமாகத் தீர்க்கப்பட்டுள்ளது.

ஒரு நாள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர் சங்கத்திற்கும் கல்வி அதிகாரிகளுக்குமிடையே இடம்பெற்ற பேச்சுவார்த்தையைத் தொடர்ந்து வட்டாரக் கல்வி அதிகாரியாகக் கடமையாற்றி வந்த திரு. மக. சீனிவாசகம் அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. சீனிவாசகம் முன்னுள் பூவரசங்குளம் கனிஷ்ட மகா வித்தியாலய அதிபராவார். அவர் காலத்திலேயே ''பூவரசு'' என்னும் இதழ் வருடந்தோறும் அப்பாடசாலையினுல் வெளியிடப்பட்டு வந்தது.

# ஆசிரியர்தினமும் பாராட்டு விழாவும்

[உடுவில்]

நவாலி கொத்தணிப் பாடசாலைகளின் ஆசிரியர் தினமும் பாராட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் நவாலி கொத்தணி அதிபர் திரு. ஐ. மனோகரன் தலைமையில் நவாலி மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் யாழ்ப்பாணம் மாவட்ட கல்விப்பணிப்பாளர் இரா. சுந்தரலிங்கம் பிரதம விருந்தினராகவும், மருதனுமடம் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர்.

கடந்த ஆண்டில் ஒருநாளாவது லீவு எடுக்காது வேலை செய்த அதிபர்களும் ஆசிரியர்களும் பாராட்டப்பட்டு அவர்களுக்கு சான்றிதழ்களும் இவ்விழாவில் வழங்கப்பட உள்ளன.

ஆனைக்கோட்டை அ. மி. த. க. பாடசாலை அதிபர் நா. சிவபாதம் [புத்தொளி] நவாலி தெற்கு அ. மி. த. க. பாடசாலை அதிபர் திரு. க. கணபதிப்பிள்ளை, நவாலி மகாவித்தியாலய உபஅதிபர் திரு.சி.நாகையா ஆகியோரே பாராட்டப்பட உள்ளவர்களாவர். [109]

## அரசு ஊழியர்கள்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

அண்மைக் காலங்களில் மக்களுக்கேற்பட்ட சொல்லொணு துன்பங்களில் இருந்து ஆறுதலடையக் கூடியபல நடவடிக்கைகளை மேற்கொண்டவர்கள். வேறுபாடு காட்டாது ஏற்றத்தாழ்வுகள் பாராட்டாது சகலருக்கும் சமமான வழியில் உதவிகள் செய்தவர்கள்.

யாழ்ப்பாணம் வைத்தீஸ்வராக் கல்லூரி அதிபர் சி. சிவசரவணபவன், கந்தரோடைக் கிராமசேவை உத்தியோகத்தர் திரு. க. சந்திரவர்மன், ஆசிரியர் திரு, சிவசக்திவேல். ஆசிரியர் திரு.முத்துக்கிருஷ்ணர், திரு. மு. சின்னத்துரை உட்பட பலர் பாராட்டுரைகள் வழங்கினர். (109)

## வீரவேங்கை நினைவாக குழாய் கிணறு

(நாவற்குழி)

கல்வயலைச் சேர்ந்த வீரவேங்கை நகுலனின் நினைவாக கல்வயலில் குழாய்க் கிணறு அமைக்கப்படவுள்ளது.

இதனுல் கல்வயல் பகுதியில் உள்ள குடிநீர்ப் பிரச்சனை தீர வழியேற்படும். கல்வயல் பகுதிப் பொதுமக்களும் இதில் கூடுதலாக ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பான முழுஏற்பாடுகளையும் கல்வயல் சிற்றூரவை உறுப்பினர்களும், பொதுமக்களும் மேற்கொண்டுள்ளனர். நினைவு தினமான இம்மாதம் 24-ம் திகதி இந்தக் குழாய்க் கிணற்றை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (107)

## விவசாயிகளுக்கு சலுகை

(யாழ்ப்பாணம்)

வடபிரதேச கமத்தொழில் சேவை நிலையங்களில் இரண்டு சக்கர நான்கு சக்கர உழவு யந்திரங்கள் பொதுமக்கள் நன்மைகருதி வாடகைக்குவிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விவசாயிகள் குறைந்த வாடகையில் இச்சலுகைகளை பெறுமாறு கமத்தொழில் சேவை நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (152)

## ஓராண்டு நினைவுதினம்

[ஒட்டுசுட்டான்]

நெடுங்கேணியில் மரணமடைந்த முல்லைத்தீவு மாவட்ட பெறுப்பாளர் லெப். கேணல் நவம் [டடி] அருமைராசா ஆகியோரை ஓராண்டு நினைவாக, கொக்குத்தொடுவாய், கருனுட்டுக்கேணி, கொக்கிளாய் மக்களால் நினைவுநாளாக கொண்டாடப்பட்டது.

இதே வேளை நெடுங்கேணி மழகளாலும் இந்நினைவுதினம் கொண்டாடப்பட்டது. [144]

## சனசமூகநிலைய கலாசார விழா

(வவுனியா)

வவுனியாநொச்சிமோட்டை சனசமூகநிலையம் நடாத்தும் தொடர்ச்சியான ஏழாவது கலாசாரவிழா இம்மாதம் 30ம் திகதி நடைபெறவிருக்கின்றது.

பிரதான நிகழ்ச்சியாக நால்வர் கொண்ட ஒருநாள் கரபந்தாட்டப் போட்டி நடைபெறுவதுடன் இளந்தென்றல் கலாமன்றம் அளிக்கும் காத்தவராயன் சரித்திர நாடகம் நான்காவது தடவையாக மேடையேற்றப்படவிருக்கிறது.

இந்நிகழ்ச்சிக்கு பிரதம விருந்தினராக வவுனியா அரச அதிபர் திரு. செ. பத்மநாதன், சிறப்பு பிரதமவிருந்தினர்ராக வவுனியா திட்டப் பணிப்பாளர் செ. ரங்கராஜன், ஐ. நா.சபை புனர்வாழ்வு பொறுப்பதிகாரி பொ. கமலநாதன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. நாகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

# "புலிகளின் ஆயுதபலம் ஆட்பலம் அதிகரித்துள்ளது" - தினேஷ்

(நாவற்குழி)

''தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத பலமும், ஆட்பலமும் இன்று அதிகரித்துள்ளது என்பதை நீங்கள் அறிவீர்கள். இப்பொழுது, எமது இயக்கத்தில் பலர் சேர்ந்த வண்ணமிருக்கிறார்கள்.'' தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க தென்மராட்சிப் பொறுப்பாளர் திரு. தினேஷ் சாவகச்சேரியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் சுகாதாரப் பிரிவுக் காரியாலயத் திறப்பு விழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்கச் செயலாளர் திரு. இ. சின்னத்தம்பி தலைமையில் புலிகளின் சுகாதாரப் பிரிவுக் காரியாலய முன்றலில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. தினேஷ் தொடர்ந்து பேசுகையில்: ''யாழ். மாவட்டத்திலேயே தென்மராட்சி மிகவும் பின்தங்கிய பிரதேசமாகும். இங்கு சுகாதார தேவைகள் அவசியமாகும். இதுவரைகாலமும், போராட்ட காலத்திலும், அதற்குப் பின்னரும் சுகாதாரத்தேவைகளை நாம் ஓரளவு செய்துள்ளோம்: சுகாதாரப் பிரிவு இங்கு திறக்கப்படுவதன்மூலம் தென்மராட்சிப் பகுதிக்கு வேண்டிய சகல உதவிகளையும் செய்ய மக்கள் எமக்குப்பூரண ஆதரவு தரவேண்டும். ஆபத்தான காலத்தில் செய்யவேண்டிய முதலுதவி சம்பந்தமான முதலுதவிப் பயிற்சித் திட்டத்தில் இளைஞர்களும், யுவதிகளும் கலந்துகொண்டு நமது நாட்டை முன்னேற்ற வழி செய்யவேண்டும்.''

வீரமரணமடைந்த கல்வயல் பிரதேசப் பொறுப்பாளர் கண்ணனின் தாயார் திருமதி நமசிவாயம் நாடாவை வெட்டிக் காரியாலயத்தை திறந்து வைத்தார்.

திரு. நடராசக் குருக்கள், வண. பிதா செல்வவிஞயகம் ஆகியோர் ஆசியுரை வழங்கினர்கள் வடசாவகச்சேரிகொத்தணி அதிபர் திரு. கே. எஸ். குகதாசன், சாவகச்சேரி நகரசபை ஆணையாளர் திரு. த. நவரத்தினராசா ஆகியோர் உட்பட பலர் உரை நிகழ்த்தினர்கள். கூட்டமுடிவில் இசை நிகழ்ச்சியும் இடம்பெற்றது. (107)

## விபத்தில் சிறுவன் காயம்

(யாழ்ப்பாணம்)

பாடசாலையிலிருந்து வீடு திரும்பிய சிறுவன் வீதியில் சைக்கிள் விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் தலையாளி என்ற இடத்தில் இடம்பெற்ற இவ்விபத்தில் அவ்வூரைச் சேர்ந்த காந்தகுமார் பிரிந்தாபன் என்ற எட்டுவயதுச் சிறுவனே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். [56]


'ஈழநாடு'

வார மலர்

20- 05 - 1990

★ வைத்திய ஆலோசனை

★ மொரிசியசில் இரு வாரங்கள்

★ ஏக்கங்கள் (சிறுகதை)

★ தேன் (கட்டுரை)

★ கிழக்கும் மேற்கும் (தொடர் கவிதை)

★ கறுப்பென்றல் வெறுப்பா? (கவிதை)

★ தமிழ் இலக்கியச் சுவை.

★ வாழ்வு தரும் பிணங்கள்

★ வானெலி நாடகம் – 2

★ நகைச்சுவை

★ ஞாயிறு மஞ்சரி

★ மாணவர் மன்றம்

★ மங்கையர் மஞ்சரி

★ நூல் அரங்கு

★ வார பலன்

மற்றும்

வழக்கமான அம்சங்கள்

பக்கங்கள் - 12

விலை ரூபா 4/-

## இலங்கை மின்சார சபை:
# 400 உள்ளூராட்சி சபையின் மின்சாரத்தை பொறுப்பேற்கும்

(யாழ்ப்பாணம்)

இலங்கை மின்சாரசபை இந்த வருடத்துக்குள் 400 உள்ளூராட்சி சபைகளின் மின்சார வழங்கல் விநியோக வேலைகளை பொறுப்பேற்கவுள்ளது.

மேற்படி உள்ளூராட்சிசபைகள் ஒழுங்காக மின்கட்டணங்களை சபைக்கு செலுத்தவில்லை. அத்துடன் மின்சார வேலைகளில திருப்திகரமாக இயங்கவில்லை என்று காரணம் கூறப்படுகின்றது.

மேலும் இதைத் தொடர்ந்து 150 உள்ளூராட்சி சபைகளின் மின்சார வேலைகளையும் இலங்கை மின்சாரசபை பொறுப்பேற்கவுள்ளதாக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பல இலட்சக்கணக்கான ரூபாய்களை மின்சாாக் கட்டணமாக இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தாது உள்ளூராட்சி சபைகளின் மின்சார விநியோக வேலைகள் யாவற்றையும் அடுத்த சில வருடங்களில் இலங்கை மின்சாரசபை பொறுப்பேற்கவுள்ளது. இதற்கிடையே உள்ளூராட்சி சபைகள் இதனையிட்டு தமது ஆட்சேபனைகளைத் தெரிவித்துள்ளன. (153)

# "மக்களின் உயிர்காக்க விவசாயம் அவசியம்"
## - டொமினிக்

(மட்டுவில்)

''மக்களின் தலையானதும் மக்கள் உயிர்காக்க தேவையானதும் விவசாயம் ஒன்றே தான். உணவில்லையேல் உணர்வில்லை'' சாவகச்சேரியில் நடைபெற்ற விவசாயிகளுக்கான கருத்தரங்கில் விடுதலைப்புலிகள் யாழ். மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு. டொமினிக் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: எமது விடுதலைப் போராட்டங்களில் விவசாயம் ஓர் முதன்மையானது. எமது மக்களின் நல்ல பசுமைப் புரட்சியை ஏற்படுத்துவதன்மூலமே எம்மை ஓர் தலைசிறந்த சுதந்திர தேசிய தமிழினமாக ஆக்கிக் கொள்ளத் தயாராக்கிக் கொள்கிறோம்.

எனவே எமது இனத்தின் சுதந்திரம் பேணப்பட வேண்டும். மக்கள் பசிப்பணியை அகற்றி சுதந்திரத்தைப் பேண வேண்டும். இதற்கு விவசாயிகளது சேவை மிக முக்கியமானது.

இக்கருத்தரங்கு தென்மராட்சிப் பிரதேச அரசியல் பொறுப்பாளர் திரு. கே. பாப்பா தலைமையில் நடைபெற்றது.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சிப் பகுதியில் விவசாயக் கழகங்களை அங்குரார்ப்பணம் செய்து வருகின்றனர். ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள சிற்றூரவையினர்மூலம் ஒவ்வொரு கிராமத்திலும் சிறந்த ஏழை விவசாயிகளை அழைத்து அவர்கள்மூலம் இந்த விவசாயிகள் கழகம் அமைக்கப்பட்டு வருகிறது. (82)

## ராசி பலன்

வெள்ளிக்கிழமை
18 - 05 - 1990

மேடம்: நண்பர்களால் கேடு, பொய் பேசுதல், காணி பூமி பற்றிய பேச்சு, உஷ்ண வியாதி

இடபம்: உழைப்பு, ஒப்பந்தம், பணவரவு, தெய்வ வழிபாடு.

மிதுனம்: வீண்விரயம், சுபசெய்தி, ஆலயச் செலவு, உஷ்ணவியாதி.

கடகம்: சமூகசேவை, பணவரவு, வீண்விரயம், தொழிற் சிந்தை.

சிங்கம்: கடினவாக்கு, வைராக்கியம், வெறுப்பு, தந்திரப்போக்கு, பணவரவு.

கன்னி: மேலதிகாரிகள் உதவி, பணவரவு, கடினப்போக்கு, எதிர்ப்பு.

துலாம்: கௌரவம், மனநிம்மதி, உற்சாகம், பொய் பேசுதல்.

விருச்சிகம்: செல்வாக்கு, தந்திரப்போக்கு, பணவரவு, தாமதம்.

தனுசு: பிடிவாதம், புதிய யோசனை, அசதி, புதியஇடம்.

மகரம்: ஓய்வு, வீண் யோசனை, குடும்பப் பிரச்சனை, நீசர் உதவி.

கும்பம்: கடினவாக்கு, நீசரால் தொல்லை, இனசனவரவு உதவிகள்.

மீனம்: பணவரவு, தூரத்துச்செய்தி, சங்கீதம், செலவு.

இ. மகாதேவா

## பயிற்சிநெறி ஊக்குவிப்பு

[பண்டத்தரிப்பு]

காங்கேசன்துறை கொத்தணி அண்மையில் நடத்திய வதிவிட உடற்கல்வி பயிற்சிநெறிக்கு பண்டத்தரிப்பு கோட்ட உதவிக் கல்விப் பணிப்பாளர் கோட்ட அபிவிருத்தி நிதியிலிருந்து ஊக்குவிப்புப் பணமாக ஆயிரம் ரூபாவை வழங்கியுள்ளார்.

கோட்ட மூலமாக நடைபெறும் செயல் திட்டங்களுக்கு மேலதிகமாக காங்கேசன்துறை கொத்தணி மேற்படி வதிவிட, உடற்கல்விப் பயிற்சிநெறியை ஏற்பாடு செய்து சிறப்பாக நடாத்தியுள்ளதை பாராட்டுமுகமாகவே இந்த ஊக்குவிப்புப் பணம் தம்மால் வழங்கப்பட்டது என்றும், இதுவோர் முன்மாதிரியான முயற்சி என்றும் பண்டத்தரிப்பு கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு இ. சிவானந்தன் தெரிவித்தார். [72]

## நிர்வாகிகள்

(உடுவில்)

உடுவில் நாவலடி வைரவர் சனசமூக நிலைய அங்குரார்ப்பணக் கூட்டம் உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை துணை அதிபர் திரு. வி. பரிபூரணானந்தசர்மா தலைமையில் நடைபெற்றது.

பின்வருவோர் சனசமூக நிலையத்தின் நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: எஸ். கே. முத்துலிங்கம், உப தலைவர்: டாக்டர் எஸ். ரி. புவிராஜன், செயலாளர், வி. பரிபூரணானந்தசர்மா, உப செயலாளர்: திருமதி பு. மகாலட்சுமி, பொருளாளர்: எஸ். பசுபதி. (109)

## நூலகம் திறக்க ஏற்பாடு

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையததின் முன்னைய தலைவரும் அண்மையில் அகால மரணமடைந்தவருமான அமரர் ரகுபதியின் நினைவாக நெடுந்தீவு கிழக்கு சனசமூக நிலையத்தினர் ரகுபதி நினைவு நூலகம் ஒன்றைத் திறக்க சகல ஏற்பாடுகளையும் செய்து வருகின்றனர். (133)

## அன்பளிப்பு

(உடுவில்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக வர்த்தகத்துறை இரண்டாம் வருட மாணவன் திரு. பூபாலசிங்கம் சுரேஸ்வரனுக்கு மானிப்பாய் பரிஸ்லியோ கழகத்தினரின் உதவியுடன் கொட்டாஞ்சேனை லயன்ஸ் கழகத்தினரால் மடித்துக் கொண்டு எடுத்துச் செல்லக்கூடிய முச்சக்கர வண்டியொன்று அன்பளிப்புச் செய்யப்பட்டது. (109)

## அமைதி வேண்டி விசேட ஹோமம்

(யாழ்ப்பாணம்)

சுன்னுகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான மகோற்சவவைபவம் நேற்றுத்தொடக்கம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

இம்மாதம் 27-ம் திகதிவரை நடைபெறும் திருவிழாக் காலங்களில் திருமுறைக் காவலர் சி, சண்முகவடிவேலின் திருமுறைஓதலும், பண்டிதர் கா. நமசிவாயத்தின் சைவ நற்சிந்தனை ஆகிய சமய நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்றன.

நாட்டில் அமைதியும் சாந்தியும் வேண்டி, ஐந்து குண்டங்கள் அமைத்து. ஐந்து குருமார்களினுல் விசேட பூசையும், ஹோமமும் நடைபெறவுள்ளது குறிப்பிடத்தக்கது. (ம)

## வடக்கு - கிழக்கு மாகாணசபை
## நியமனம் பெற்ற மூவர்
# திடீர் வேலை நீக்கம்!

(மானிப்பாய்)

வடக்கு கிழக்கு மாகாண சபையால் நியமனம் பெற்ற மூவர் திடீரென கிடைக்கப் பெற்ற உத்தரவைத் தொடர்ந்து வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் யாழ். செயலகத்தில் இடம் பெற்றுள்ளது.

கடந்த மார்ச் மாதம் வடக்கு கிழக்கு மாகாண சபை மூலம் நியமனம் பெற்று யாழ். செயலகத்தில் பணிபுரிந்த மூவருக்கு இம்மாதம் முதல் நீங்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளீர்களென மேற்படி மாகாண சபையின் உள்துறை அமைச்சிலிருந்து அனுப்பி வைக்கப்பட்ட கடிதத்தினைத் தொடர்ந்து இவர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இம்மாகாண சபையால் ஏற்கனவே நியமனம் பெற்ற சிலர் தற்போது அமைய ஊழியர்களாக யாழ். செயலகத்திலும் உதவி அரசாங்க அதிபர் அலுவலகங்களிலும் தற்போது பணிபுரிகின்றனர். இவர்களது நிலையும் தர்மசங்கடத்தில் இருப்பதாக சம்பந்தப்பட்ட ஊழியர்களில் சிலர் கவலையுடன் தெரிவித்துள்ளனர். (71)

# தென்மராட்சியில்
## மாம்பழம் தட்டுப்பாடு!

(மட்டுவில்)

மாம்பழத்திற்குப் பெயர் போனஇடமானதென்மராட்சியில் கடந்த இரண்டு வருடங்களாக மாம்பழத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

மாம்பழத்திற்கு தென்மராட்சிப் பகுதியில் ஒருவகைப் புழு உயர் பழமரங்களை தாக்குவதாகவும் அதன் தாக்குதல் காரணமாகவே கடந்த இரண்டு ஆண்டுகளாக இப்பகுதியில் மாம்பழ தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக கமத்தொழில் திணைக்களம்தெரிவித்துள்ளது.

இதைத்தொடர்ந்து தென்மராட்சிப்பகுதி விவசாய விரிவாக்க உத்தியோகத்தர் திரு. க. சண்முகநாதன் பழமரங்களுக்கு ஒருவகை மருந்து தெளிப்பதில் மக்களை ஈடுபடுத்தியுள்ளார்.

மின்கருவி மூலம் உயர்ந்த பழமரங்களுக்கு மருந்து தெளிக்கப்படுகிறது. இது நல்ல பலனை அளிக்கும் என்ற நம்பிக்கை கிராம மக்களுக்கு ஏற்பட்டுள்ளது.

ஒரு மரத்திற்கு மருந்து தெளிக்க 50 ரூபா அறவிடப்படுகிறது.

இந்த ஆண்டு அடுத்த பருவ காலத்தில் மாம்பழம் போதியளவு கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (82)

### சாவகச்சேரியில் மாம்பழம் 12 ரூபா

(மட்டுவில்)

சாவகச்சேரிச் சந்தையில் கறுத்தக் கொழும்பான் மாம்பழம் ஒன்று பத்து ரூபா முதல் பன்னிரண்டு ரூபா வரையில் விற்கப்படுகிறது. (85)

## தேசியவீரர் தினம்: கட்டுரைபேச்சு
# போட்டி முடிவுகள்

(பண்டத்தரிப்பு)

இவ்வருட தேசிய வீரர்கள் தினத்தை முன்னிட்டு பண்டத்தரிப்பு கோட்டக்கல்வி பிரிவு ரீதியில் நடாத்தப்பட்ட கட்டுரைப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்றவர்களின் விபரம் பின்வருமாறு:

கட்டுரைப்போட்டி தமிழ் மொழி மூலம் (ஆண்டு 1-8) முதலாமிடம் செல்வி எஸ். சிவரஞ்சனி. சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி. இரண்டாமிடம் செல்வி வி. காயத்திரி அளவெட்டி அருணோதயக் கல்லூரி. கட்டுரைப்போட்டி தமிழ்மொழி மூலம் ஆண்டு [9-13) முதலாமிடம் செல்வன் ஏ. பிலிப் தேவசீலன், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி. இரண்டாமிடம்: செல்வி ஜி. சிவரஞ்சினி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி. மூன்றுமிடம்: செல்வி இ. வதனி, மல்லாகம் மகாவித்தியாலயம்.

கட்டுரைப்போட்டி ஆங்கில மொழிமூலம் (ஆண்டு 9 -13) முதலாமிடம்: செல்வி எஸ். சுபாங்கி, அளவெட்டி அருணோதயாக் கல்லூரி.

பேச்சுப்போட்டி ஆங்கில மூலம் (ஆண்டு 1-8)

முதலாமிடம்: செல்வன் எஸ். ஜி. கிஷோலோஜன், இளவாலை புனிதஹென்றியரசர் கல்லூரி.

பேச்சுப்போட்டி: தமிழ் மொழிமூலம் (ஆண்டு 1-8)

முதலாமிடம்: செல்வன் டி. டனில் பிரேம்லால் காந்தி, தெல்லிப்பழை யூனியன் கல்லூரி, இரண்டாமிடம்: செல்வன் எம். இராமேஸ்வரன், இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி, மூன்றுமிடம்; செல்வி எல். ஜெயந்தி, மல்லாகம் மகாவித்தியாலயம்.

பேச்சுப்போட்டி தமிழ் மொழி மூலம் (ஆண்டு 9-13)

முதலாமிடம்: செல்வன் என். கிருபநாதன், சுழிபுரம் விக்ரோறியாக்கல்லூரி,

(7-ம் பக்கம் பார்க்க)

## நெடுந்தீவு - குறிகாட்டுவான்
# மோட்டார் படகு சேவை தாமதம்; நிவர்த்திசெய்ய கோரிக்கை

(நெடுந்தீவு)

''நெடுந்தீவு குறிகாட்டுவான் இரண்டு மோட்டார் படகுகளுக்கு ஒரு மாலுமித் தொகுதியே பணியாற்றுவதால், சேவைகள் தாமதம் அடைகின்றது அல்லது தடைப்படுகின்றது. இவற்றை உடன் நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல் வேண்டும்''.

இவ்வாறு நெடுந்தீவு கிழக்கு கிராம அபிவிருத்தி மன்றம், நெடுந்தீவுஉதவிஅரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாஜம், நெடுந்தீவுமரநடுகை இயக்கம் ஆகியன இணைந்து வடபகுதி பெருந்தெருக்கள் அபிவிருத்தி அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள மகஜர் ஒன்றின் மூலம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

அம்மகஜரில் மேலும் நெடுந்தீவு குறிகாட்டுவான் பிரயாணிகள் சேவைக்கு 'குமுதினி' 'வலம்புரி' மோட்டார் படகுகள் சேவையில் ஈடுபடுத்தப்பட்ட போதிலும். இவ்விரண்டு படகிற்கும் பொதுவாக ஒருமாலுமி குழுவே பணியாற்றி வருகின்றது.

''வலம்புரி' மோட்டார் படகு நெடுந்தீவு குறிகாட்டுவான் சேவையில் ஈடுபடுத்தி ஒரு மாதத்திற்கு மேலாகியும் அதற்குரிய மாலுமி குழு இன்னும் நிரப்பப்படாமலே இருந்து வருகின்றது. இதனுல் ஒரே மாலுமி குழு இரண்டு படகுகளிலும் மாறி மாறிப் பணியாற்றுவதால், உரிய நேரத்தில் படகு புறப்படுவதிலும் தாமதம் அடைந்து வருகின்றது. அத்துடன் பிரயாணிகள் படகின் தண்டேலுக்கு எதிர்பாராத சுகயீனம் ஏற்படின் படகுச்சேவை முற்றாக தடைப்பட வேண்டிய இக்கட்டான நிலையிலும் உள்ளது. அண்மையில் இவ்வாறான சம்பவம் நடைபெற்றுள்ளது'' என்றும் அம்மகஜரில் தெரியப்படுத்தப்பட்டுள்ளது. (133)

## விளையாட்டுப் போட்டி

(கொக்குவில்)

அராலி சரஸ்வதி மகாவித்தியாலய இல்லங்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 31ம் திகதி நடைபெறவுள்ளது. (135

## நரசிங்க

(4ம் பக்கத் தொடர்ச்சி)

ளக்கோல உற்சவம் 18-5-90ல் நிகழவுள்ளது. அடியார்கள் அன்றைய தினம் அபிஷேக ஆராதனைகளைக் கண்டு தரிசிப்பார்களாக.

சி. கணேசலிங்கக் குருக்கள்.

# மன்னர் செய்திகள்

(மன்னார்)

மன்னார் மாவட்ட அரச அலுவலர்களின் புள்ளிவிபரங்களை எடுக்கும் வேலைகளின் இணைப்பு அதிகாரியாக, மன்னார் கச்சேரி தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு- ச. மரியதாசன் குரூஸ் நியமனம் பெற்றுள்ளார். புள்ளி விபரங்கள் யாவும் எல்லா திணைக்களங்களில் இருந்தும் சேகரிக்கப்பட்டு மன்னார் கச்சேரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

## வேலைகள் துரிதம்

பொதுநிர்வாக மாகாண சபைகள் உள்நாட்டு அமைச்சின் சுற்றுநிருபத்தின்படி மன்னார்க் கச்சேரியில் சிங்களத் தேர்ச்சியின்மை காரணமாக, இதுகால வரையிலும் வருடாந்த சம்பள உயர்வு, சேவையில் உறுதிப்படுத்தல் போன்ற சலுகைகளைப் பெறாத அரச உத்தியோகத்தர்களுக்கு தற்சமயம். இந்த சம்பள உயர்வுகள், சேவை உறுதிப்படுத்தல் போன்ற வேலைகள் மன்னார் கச்சேரி நிர்வாகக் கிளையில் மிகவும் துரிதமாக நடைபெறுகின்றன.

## பொன் ஆம்பல்

தலைமன்னார் தென் கடற்கரை ஓரத்தில் மிகவும் விலைமதிக்கத்தக்க, பொன்ஆம்பல் ஒன்று ஓர் பெண்மணிக்குக் கிடைத்துள்ளது. கடற்தொழிலுக்குச் சென்று கரையை அடைந்த தன் கணவருக்கு காலை போசனம் கொண்டு சென்ற மனைவிக்கே இந்த அதிர்ஷ்டம் கிடைத்தது. ஏறக்குறைய 250 கிராம் எடையுள்ள இந்த பொன் ஆம்பலை 12,500 ரூபாவுக்கு விற்பனைசெய்யப்பட்டது.

## விளையாட்டுப் போட்டி

அண்மையில் மன்னார் மாவட்டத்திலுள்ள ஐந்து உதவி அரச அதிபர் பகுதிகளிலுள்ள விளையாட்டுக் கழகங்களுக்கான உதைபந்தாட்டம், கைப்பந்தாட்டம், (ஆண்கள்) கைப்பந்தாட்டம் (பெண்கள்(வலைப்பந்தாட்டம் எல்லை போன்ற போட்டிகள் மன்னார் விளையாட்டு அரங்கில் நடைபெற்றன. இதற்கு மன்னார் தலைமைப்பீட உதவிஅரச அதிபர் திரு.எஸ்.எம். குரூஸ் தலைமைவகித்தார். பிரதம நடுவராக மாவட்ட விளையாட்டு அதிகாரி திரு. மு. ஜிவரெத்தினம் கடமையாற்றினார்.

## கற்பகம்

மன்னார் கற்பகம் பல உள்ளூர் மூலப் பொருட்கள் விற்பனைக்கு விடப்பட்டுள்ளன. பனை வெல்லம், ஒடியல். ஒடியல் மா, பனாட்டு, பனங்கட்டி, பனம் கிறஸ் மற்றும் கைப்பணிப் பொருட்கள், பிரதேச உற்பத்திப் பொருட்களான நல்லெண்ணை, மாதுளம் ரசம், ஊறுகாய், நன்னாரி ரசம், மோர் மிளகாய், வடகம், பனை வவயின் போன்றனவும் விற்பனைக்கு உள்ளன. தினமும் மக்கள் கூட்டம் கற்பகத்தை நாடியவண்ணமாகவே உள்ளது. இதற்கு புதிய பொதுமுகாமையாளராக ஜனாப் எம். ரகீம் நியமனம் பெற்றுள்ளார்,

## நினைவு விழா

எருக்கலம்பிட்டி அல்,மனார் விளையாட்டுக்கழகம் தனது 2-வது வருட பூர்த்தியை முன்னிட்டு கலை நிகழ்ச்சிகளை ஒழுங்குசெய்துள்ளது. இந்நிகழ்ச்சிக்கு எம். ஐ. அகமட் ஜாபீர் தலைமைதாங்குவார். எருக்கலம்பிட்டி மத்தியமகா வித்தியாலயத்தில் நடைபெறும்நிகழ்ச்சியில்'' ஏமாற்றினாள்', என்ற சமூக நாடகம் வில்லுப் பாட்டுக்கள் ஓரங்க நாடகம் ஆகியன இடம் பெறும். பிரதம அதிதிகளாக மன்னார் தீவுப் பொறுப்பாளர் திரு. லக்ஸ்மன் விடுதலைப் புலிகளின் அலுவலகப்பொறுப்பாளர் திரு. துஷ்யந்தன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரைகள் வழங்குவார்கள்.

---

## மெய்வல்லுநர் போட்டி

(அச்சுவேலி)

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி 21ம் திகதி திங்கட்கிழமை நடைபெறும்.

வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும் விளையாட்டுப் போட்டிக்கு பிரதம விருந்தினராக மருதனாமடம் கோட்டக்கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. என். கணேசபிள்ளையும் சிறப்பு விருந்தினராக அச்சுவேலி கொத்தணி அதிபர் திரு. க. சிவசுப்பிரமணியமும் கலந்து கொள்கின்றனர், (74)

---

## மாணவர்கள்

(5ம் பக்கத் தொடர்ச்சி

அவர்கள் சுயவேலையை நிச்சயம் ஏற்படுத்திக் கொள்வார்கள் என்றும் கூறினார்.

கடந்த ஆண்டு கற்கைநெறியில் சித்தியடைந்தவர்களுக்கானசான்றிதழ்களை கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் வழங்கினார். (109)

---

## தேசிய வீரர்

(6-ம் பக்கத். தொடர்ச்சி)

இரண்டாமிடம்: செல்வி வி. தமிழினி, தெல்லிப்பழை மகாஜனக்கல்லூரி, மூன்றாமிடம்; செல்வி கே. தவநாயகி. காரைநகர் டாக்டர்ஆ. தியாகராசா மத்திய மகாவித்தியாலயம். (72)

---


ஹரன்

வெண்திரையில்!

பி. ப. 4-00, 6-45. 9-30

நாளை முதல்

ஜெய்சங்கர்-K.R.விஜயா

நாகேஸ் சுருளி

நடித்த

திருடி


---

### 14-வது உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டி:

# இத்தாலி விழாக்கோலம் சகல ஏற்பாடுகளும் பூர்த்தி

ஜூன் 8-ம் நாளை முழு உலகமுமே எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறது. ஆம், அன்றுதான் 14-வது உலக தங்ககோப்பை உதைபந்தாட்டப் போட்டி, இத்தாலியில் மிக கோலாகலமாக ஆரம்பமாகின்றது.

இத்தாலியின் நகரங்கள் எல்லாம் தற்போது பூரண விழாக்கோலம் பூண்டுள்ளது. வீதிகள் எல்லாம் வர்ண மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளது. வீதிகளின் குறுக்கே, இப்போட்டியில் பங்குபற்றும் நாடுகளின் தேசியக் கொடிகள பறக்கவிடப்பட்டுள்ளன. கடைகள் அனைத்திலும் உலகப்புகழ் பெற்ற உதைபந்தாட்ட வீரர்களினதும், கோஷ்டிகளினதும் வர்ணப் படங்களும், கொடிகளும் விற்பனையாகிய வண்ணமே இருக்கின்றன.

பாடசாலை மாணவர்களும், இளைஞர்களும், யுவதிகளும் தமது இத்தாலிக் கோஷ்டி வீரர்களின் உருவப்படங்கள் பொறிக்கப்பட்ட உடைகளை அணிந்து வீதி-வீதியாக கோஷமிட்டவண்ணம் உலா வருகின்றார்கள்.

இவைதவிர, உலகின் பல பாகங்களிலுமிருந்து பலபத்திரிகையாளர்களும, புகைப்படப் பிடிப்பாளர்களும், ரசிகர்களும் இத்தாலியை நோக்கி படையெடுத்தவண்ணம் இருக்கிறார்கள். இத்தாலியில் உலகப் போட்டி நடைபெறும் 12 முக்கிய நகரங்களிலும் உள்ள ஹோட்டல்களில் தற்போதிருந்தே இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது. குறிப்பாக, பிறேஸில் நாட்டிலிருந்தே ரசிகர்கள் மிகக்கூடுதலாக




இம்முறை இத்தாலி நோக்கி வந்தவண்ணமுள்ளனர்.

மேற்படி போட்டியை முன்னிட்டு, இத்தாலி முழுவதும் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. விமானநிலையங்கள்,புகையிரதஸ்தானங்கள், ஹோட்டல்கள் விளையாட்டு மைதானங்கள் அனைத்திலும் தற்போதிருந்தே விசேட அதிரடி பொலிஸ், இராணுவப் பிரிவினர் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். போட்டிகள் நடைபெறும் போது, போட்டிகளைக் குழப்புவதற்கோ அல்லது விளையாட்டு வீரர்களுக்கு தீங்கு விளைவிக்கக் கூடிய செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக கடும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கவும் படையினருக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளது. இதுகுறித்து அரசும், போட்டி அமைப்பாளர்களும் எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

உலகக் கிண்ணப் போட்டியில் பங்குபற்ற இத்தாலி வரும் 23 நாடுகளின் கோஷ்டிகளும் தங்குவதற்கு இம்முறை மிக நவீன வசதிகள் கொண்ட விடுதிகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கோஷ்டியும் விளையாட்டுப் பயிற்சி பெறுவதற்கு தனித்தனி விளையாட்டு மைதானங்களும், நீச்சல் தடாகங்களும் விஷேடமாக அமைக்கப்பட்டுள்ளன. போட்டிகள் நடைபெறும் மைதானங்களை வீரர்கள் இலகுவாக சென்றடைய கூடுதலாக சுரங்கப் பாதையிட்டது.

**நமது விளையாட்டு நிருபர் 'தேவா'**

கள் அமைக்கப்பட்டுள்ளன. விளையாட்டு வீரர்களையோ அல்லது மத்தியஸ்தர்களையோ ரசிகர்கள் நெருங்க முடியாதபடி மைதாதன அமைப்புகள் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

24 நாடுகள் பங்குபற்றும் இந்த உலக தங்கக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியில், மொத்தம் 52 போட்டிகள் நடைபெறவுள்ளன. ஜூலை 8-ம் திகதி இத்தாலியின் தலைநகரான ரோமில் நடைபெறும் இறுதி ஆட்டத்தை மூன்று லட்சம் மக்கள் நேரடியாக பார்ப்பதற்கும், 15 ஆயிரம் கோடிமக்கள் உலகின் சகல பாகங்களிலும் நேரடி ஒளிபரப்பு மூலம் பார்க்கவும், வானொலி நேர்முக வர்ணனைகளை கேட்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. ஜூன் 8-ம் திகதி மிலான் நகரில் ஆரம்பவிழா நிகழ்ச்சிகள் கோலாகலமாக நடைபெறும். 9-ம் திகதி முதல் போட்டிகள் ஆரம்பமாகும்.

மொத்தத்தில் உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை சிறப்பாக நடாத்துவதற்கு, இத்தாலி தற்போது தயார் நிலையில் இருக்கிறது.

உலக கிண்ண உதைபந்தாட்டப் போட்டியை இத்தாலி நடாத்துவது இது முதல் முறையல்ல. ஏற்கனவே 1934-ம் ஆண்டில் 2-வது உலகப் போட்டியை மிகச் சிறப்புற நடாத்தியதுடன், அம்முறை சகல போட்டிகளிலும் வெற்யீட்டி 'உலக கிண்ணத்தையும்' சுவீகரித்துக் கொண்டதும் குறிப்பிடத்தக்கது. (வி)

---

## மாணவர்மன்ற ஒன்றுகூடல்

(அச்சுவேலி)

கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர் மன்றத்தின் வருடாந்த ஒன்றுகூடலும் மதியபோசனமும் 29ம் திகதி செவ்வாய்க்கிழமை நடைபெறும். (74)

---

## மூன்றுமாடி கட்டடம்

(நெல்லியடி)

சுமார் ஐந்து லட்சம் ரூபா செலவில் உடுப்பிடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மூன்று மாடிக் கட்டடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இதற்கான முதற்கட்ட நிவாரணமாக 2 லட்சம் ரூபாவை வடக்குக் கிழக்கு கூட்டுறவு ஆணையாளர் திணைக்களம் அனுப்பிவைத்துள்ளது

இக் கூட்டுறவுச் சங்க கட்டடம் இலங்கை இராணுவத்தினராலும் இந்தியப் படையினராலும் சேதமாக்கப்பட்டமைக்கு நிவாரணமாகவே பணம் வழங்கப்பட்டதாக மேற்படி சங்கத்தலைவர் தெரிவித்தார். [55]

---

## கல்விச் சுற்றுலா

(அச்சுவேலி)

அச்சுவேலி புனித திரேசாள் மகளிர் கல்லூரி மாணவர்கள் குழு கல்விச்சுற்றுலா மேற்கொண்டு அநுராதபுரம் பகுதியில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க இடங்களைப் பார்வையிட்டது. [74]

---

### பிரான்ஸ் வைத்தியக் குழுவினர்

# சாவகச்சேரியிலும் கடமையாற்றுவார்கள்

(நாவற்குழி)

தென்மராட்சி நோயாளர் நலன்புரிச்சங்கத்தின் முயற்சியினால் மந்திகை வைத்தியசாலையில் கடமையிலீடுபட்டிருக்கும் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'எம். எஸ். எப்'வைத்தியக்குழு இம்மாதம்24ம் திகதி தொடக்கம் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் சாவகச்சேரி அரசினர் வைத்தியசாலையில் கடமையாற்றவிருக்கிறார்கள்.

இவர்கள் சாவகச்சேரியில் கடமையாற்றும் காலத்தில் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வார்கள் என்றும் இது தென்மராட்சி மக்களுக்கு கிடைத்த பெரும் வாய்ப்பு என்றும்தென்மராட்சி நோயாளர் நலன்புரிச் சங்க செயலாளர் தெரிவித்தார். (107)

---

# சுன்னாகம் லயன்ஸின் முதல் சேவைத் திட்டம்

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினர், மருதனாமடம் இராமநாதன் கல்லூரியின் அருகாமையில் பாதசாரிகள் கடவையை நாளை சனிக்கிழமை ஆரம்பித்து வைக்க ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

சனிக்கிழமை காலை ஆரம்பமாகும் இவ்வைபவத்திற்கு யாழ்ப்பாணம் கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பாதசாரிகள் கடவையை அங்குரார்ப்பணம் செய்து வைப்பார்.

கல்லூரி முன்பாக மரம் நாட்டு விழாவை தொழிலதிபர் திரு. க. கனகராசா ஆரம்பித்துவைப்பார்.

சுன்னாகம் லயன்ஸ் கழகம் அண்மையில் சர்வதேச அங்கீகாரம் பெற்றபின்னர் நடைபெறும் முதலாவது சேவைத் திட்டம் என்பது குறிப்பிடத்தக்கது. விழா ஏற்பாடுகளை லயன்ஸ் கழக முதல்பிரதித் தலைவர் லயன் ஆர். கே. குலசேகரன் செய்துள்ளார்.

---

# வெளிக்கள நிலைய பரீட்சை இன்று ஆரம்பம்

(அச்சுவேலி)

தொண்டைமானாறு கல்வி வெளிக்கள நிலைய பரீட்சை சபையினால் 12ம் ஆண்டுமாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைகள் இன்று 18ம் திகதி தொடக்கம் 25ம் திகதி வரை நடைபெறும்.

இன்று புவியியல் மனைப் பொருளியல், 21ம் திகதி அளவையியல், தமிழ் 23ம் திகதி சமயம், பொருளியல் 24ம் திகதி பௌதிகவியல், கணக்கியல், தூயகணிதம், தாவரவியல் வர்த்தகமும் நிதியும் 25ம் திகதி இரசாயனவியல், பிரயோககணிதம், விலங்கியல் ஆகிய பாடங்கள்நடைபெறும்

கலை, விஞ்ஞானம், வர்த்தகம், கணிதம் ஆகிய பாடத் துறைகளில் நடைபெறும் பரீட்சைகள் காலை, மாலை பாடங்களாக நடைபெறவுள்ளன.

## ஆசிரியர்களுக்கான ஊக்குவிப்புப்படி பாக்கி இம்மாதம் கிடைக்கும்

(அச்சுவேலி)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கடமைபுரியும் ஆசிரியர்களுக்கு வழங்கப்படவேண்டிய பாதுகாப்பு இன்மைக்கான ஊக்குவிப்புப்படி பாக்கி மே மாதச் சம்பளத்துடன் வழங்கப்படும்.

பகுதிபகுதியாக வழங்கப் படவிருக்கும் ஊக்குவிப்பு படி பாக்கியில் முதலாவது பகுதி, மே மாதச் சம்பளத்துடன் சேர்தது வழங்குவதறகான ஏற்பாடுகள் நடைபெறுவதாகத் தெரியவருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாண அரசாங்க ஊழியர்களுக்கு கடந்தவருடத்தின் பிற்பகுதி ஆறுமாதங்களுக்கும் பாதுகாப்பு இன்மைக்கான ஊக்குவிப்புப்படி வழங்க தீர்மானித்தது. (74)

### 50 வைத்திய

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

லும் புனர்வாழ்வு நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ள இந்த வைத்திய நிபுணர்களின் உதவி கோரப்பட்டுள்ளது.

ஐ. நா. அபிவிருத்திநிதியத்தூடாக (யு. என். டி. பி.)இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக அவுஸ்திரேலியா, பிரிட்டன்' அமெரிக்கா கவிற்சலாந்திடமே அவசர உதவி கோரப்பட்டுள்ளது.

### ஆயுதங்களுடன்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து காவலில்வைக்கப்பட்டுள்ளார்.

மலையகப் பகுதியெங்கும் பாதுகாப்புகள் இப்பொழுது பலப்படுத்தப்பட்டுள்ளது.

### வடபகுதி கடலில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யும் பொருள்களையும் காங்கேசன்துறை சுங்க விசேட தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைத்தனர்.

சுங்கப்பகுதியினரின் விசாரணையின்போது ஏழுபேர் தாங்கள் அகதிகள் என்றும். இந்தப் படகில் காசுசெலுத்தி இலங்கைக்கு வந்ததாகவும் கூறினர். அந்த ஏழு அகதிகளும் விடுதலைசெய்யப்பட்டார்கள். மிகுதி 5 பேரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். (153)

### வடக்கு, கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பிடத்தக்கது.

யாழ்ப்பாண பிரதம தபால் அலுவலகம் இது சம்பந்தமாக கொழும்பு மேலிடத்துடன் தொடர்பு கொண்டபோதும், 'பார்சல்'கள் ஏற்கும் 'தடைச் சட்டம்' இன்னும் வடக்கு கிழக்குமாகாணங்களில்தளர்த்தப் படவில்லை.

சட்டத்தை தளர்த்துவது சம்பந்தமாக தபால் மா அதிபர் அலுவலகம் ஆலோசித்து வருவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளையில் கல்வி சம்பந்தமான துண்டுப் பிரசுரங்கள், அறிக்கைகள் அடங்கிய சிறிய பொதிகளை தகுதிவாய்ந்த அலுவலர்கள் கொண்டுவந்தால் அவர்களுடைய சரியான ஆள் அடையாளம் நிருபிக்கப்பட்ட பின்னர் அதன் உள்ளடக்கம் என்னவென்று எழுத்து மூலம் வெளிப்படுத்தியதும் உண்மையானது என்று அதிகாரிகணித்தால் அப்படியானசிறிய கல்வி சம்பந்தமான பொதிகள் மாத்திரம் மனிதாபிமான அடிப்படையில் யாழ்ப்பாண பிரதம தபால் அலுவலகத்திலுைல் ஏற்கப்படுகின்றது என்று தபால் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். [153]

## சுன்னாகத்தில் மின்கம்பத் தண்டனை

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் ஒருவரின் சடலம் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடன், மின்கம்பத்தில் கட்டப்பட்ட நிலையில் காணப்பட்டது.

சுன்னாகம் பெற்ரோல் நிலையத்துக்கு அருகாமையில் உள்ள ஒரு மின்கம்பத்தில் இச்சடலம் காணப்பட்டது. சடலத்தின் அருகிலிருந்த ஒரு அட்டையில் சம்பந்தப்பட்ட நபர் தெல்லிப்பழையைச் சேர்ந்த கந்தசாமி என்று அடையாளம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

## கவிதை, நாடக முயற்சியில் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் இந்துக்கல்லூரியில் 'இந்து இளம்பிறை மாணவர் நாடகமன்றம்' அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் இதன் காப்பாளராகவும், ஆசிரியர்கள் பொறுப்பாசிரியர்களாகவும் இருப்பார்கள்.

பரீட்சார்த்தமாக 'வாணிவரம்' என்னும் கவிதை நாடகம் ஆண்டு 9ஃவி ஆண்டு 7 ஏ மாணவர்களால் பயிலப்பட்டு அடுத்தமாதம் 7ம் திகதி கவிஞர்சத்தியசீலனின்வெள்ளிவிழா-எழுத்து விழாவன்று அரங்கேற்றப்பட விருக்கிறது.

### கொழும்பு- காங்கேசன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காங்கேசன்துறையை வந்தடையும் இதே ரயில் காங்கேசன்துறையிலிருந்து ஞாயிற்றுக்கிழமை மாலை 5-3ப மணிக்கு புறப்பட்டு திங்கட்கிழமை அதிகாலை 3-30மணியளவில் கொழும்புகோட்டையைசென்றடையும்.

### புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் ஹமீத் பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்வதற்காக திங்கட்கிழமை காலை யாழ். வருவாரென்றும், அமைச்சரின் பாதுகாப்பை விடுதலைப்புலிகள் ஏற்றுக்கொள்வார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டது (152)

### தமிழ்க்குழுக்

(1ம் பக்கத தொடர்ச்சி)

வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தைத் தொடர்ந்து நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலே அமைச்சர் ரஞ்சன் இவ்வாறு தெரிவித்தார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியோடு தாம் நடத்திய பேச்சுவார்த்தைகள் குறித்தும் அமைச்சர் ரஞ்சன் இம்மாநாட்டில் விளக்கி கூறினர்.

பல்கலைக்கழகங்களில் இடம் பெற்றுவரும் ராகிங் சம்பவம் பற்றிக் குறிப்பிட்ட திரு: ரஞ்சன்குற்றவாளிகளுக் கெதிராக தான் கடும் நடவடிக்கை எடுக்கப்போவதாகத் தெரிவித்தார். (து)

# புலவர்மணி, பண்டிதமணி நூல்வெளியீடு அறிமுகவிழா

## மட்டக்களப்பில் 20-ல் நடைபெறும்

(மட்டக்களப்பு)

'புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நிறைவுப்பணி மன்றத்தின்' ஆதரவில் நூல்வெளியீட்டு விழாவும் நூல் அறிமுக விழாவும் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு நகர மண்டபத்தில் நடைபெறும்.

புலவர்மணியின் 'விபுலானந்தர் மீட்சிப்பத்து' வெளியீட்டு விழாவும் பண்டிதமணியின் 'பண்டிதமணி நினைவு மலர்' 'செந்தமிழ்க் களஞ்சியம்' ஆகிய நூல்களின் அறிமுகவிழாவும் அன்றையதினம் இடம்பெறும்.

மகாவித்துவான் எம். எச். சி. நடராசா தலைமையில் நடைபெறும் இவ்வைபவத்தில் பிரதம அதிதிகளாக வட-கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராசா, புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் திரு. ஏ. கே. பத்மநாதன் அரச அதிபர் திரு. இ. யோகநாதன் ஆகியோர் கலந்துகொண்டு மங்கல விளக்கேற்றி வைப்பார்கள்.

இராமகிருஷ்ண மிஷன் சுவாமி ஸ்ரீமத் ஜீவனானந்தஜி மட்டக்களப்பு ஆயர் அதிவண கிங்ஸ்லி சுவாம்பிள்ளை காத்தான்குடி அரபுக்கல்லூரி பிரதிஅதிபர் அல்ஹாஜ் எஸ். எம். அலியார் மௌலவி ஆகியோர் ஆசியுரை வழங்குவார்கள்.

புலவர் மணியின் நூல்வெளியீட்டு விழாவில் திரு. ஆ. அரசரத்தினம் 'விபுலானந்தர் மீட்சிப்பத்து' என்னும் தலைப்பிலும் திரு. இரா. நாகலிங்கம் 'புலவர்மணி நூல்கள்' என்ற தலைப்பிலும் கருத்துரை வழங்குவார்கள்.

பண்டிதமணியின் நூல் அறிமுக வைபவத்தில் கலாநிதி சி. மௌனகுரு. பண்டிதமணி நினைவுமலர் பற்றியும், வித்துவான் க. சொக்கலிங்கம் செந்தமிழ் களஞ்சியம்' பற்றியும், கலாநிதி இ. பாலசுந்தரம், 'பண்டிதமணியின் நூல்கள்' பற்றியும் கருத்துரை வழங்குவார்கள்.

விழாவில் கல்விப்பணிப்பாளர் திரு. கு, சோமசுந்தரத்தின் சிறப்புரையும் ஆசிரியமணி அ. பஞ்சாட்சரத்தின் பதிலுரையும் இடம்பெறும். (121)

## வடக்கு கிழக்கு மாகாணசபை தேர்தலில் கலந்து கொள்ள புளொட் விதித்துள்ள நிபந்தனைகள்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் பாதுகாப்பு வழங்கி சட்டத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்கு விடுதலைப் புலிகள் உட்பட எல்லாத் தமிழ் குழுக்களும் அவர்கள் விரும்பினுல் வடக்கு-கிழக்கு மாகாண பொலிஸ் படையிலும் பாதுகாப்புப்படையிலும் சேர்க்கப் படவேண்டும்இவ்வாறுவடக்கு கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் தாங்கள் கலந்து கொள்வதற்கான நிபந்தனையை தெரிவித்து ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி நேற்று விடுத்துள்ள அறிக்கையொன்றில் தெரிவித்துள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள எல்லாதீவிரவாதக் குழுக்களும் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளைக் கொண்ட இடைக்கால நிர்வாகம் அமைக்கப்பட்டு இந்த நிர்வாகம் ஆறுமாதத்திற்குக் குறையாமலும் ஒன்பதுமாதத்திற்கு கூடுதலாகஇல்லாமலும் மாகாணத்தின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக இருந்து மாகாணசபைக்கான தேர்தலை நடத்துவதற்கு பொறுப்பாக இருக்கவேண்டும்.

தேர்தல் நடைபெறும் காலம் தொட்டு முடியும்வரை உலகக் கண்காணிப்புக் குழு தேர்தலை பார்வையிடவேண்டும்.

### இன்று

[நாவற்குழி]

கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் கல்விக் கண்காட்சியும் பாலர் வகுப்புத் திறப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறவிருக்கின்றது.

பாடசாலை அதிபர் திரு. வே. இராமாரி தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் கலாநிதி வெ. திருஞானசம்பந்தர் பிரதம விருந்தினராகவும் கைதடி கொத்தணி அதிபர் திரு. சோ. கணேசலிங்கம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வார்கள்.

### 6-வது

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

ஆறுவது திருத்தச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்று பாராளுமன்றிற்கு உள்ளேயும் வெளியேயும் குரல் எழுப்பப்பட்டு வந்தது தெரிந்ததே.

இந்த ஆறுவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டால்தான் தாம் தேர்தலில் பங்குபற்ற முடியும் என விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதும் அறிந்ததே. (153)

### அடகு நகைகளை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

டால் அவை ஏலத்தில் விடப்படும். இந்த நகைகளை உரிய காலத்தில் மீளப்பெற்றுக் கொள்ளும்படி அவற்றின் உரிமையாளர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது.

சுமார் 16 கோடி ரூபாவுக்கும் மேற்பட்டபெறுமதியான நகைகள் இவ்விதம் மீளப்பெருமலிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லபுகல காட்டுப்பகுதியில் 12 யானைகள் சுட்டுக்கொலை

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் காட்டுப் பகுதியில் இயங்கும் தீவிரவாத குழுக்களின் முகாம்களை தாக்கியதாகக் கருதப்படும் 12 யானைகள் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

அம்பாறை மாவட்டத்தில் 'லஹுகல' காட்டுப்பகுதியில் நேற்றுமுன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் இந்த 12யானைகள் இறந்து கிடக்கக் காணப்பட்டன.

இந்த யானைகளின் உடல்கள் கண்டெடுக்கப்பட்ட இடத்திற்கருகில் தீவிரவாத குழுக்களின் முகாம்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் இந்த முகாம்கள் பல யானைகளால் மோசமாக சேதமாக்கப்பட்டதற்கான அடையாளங்கள் தென்படுவதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தற்போது இப்பகுதியில் தீவிரவாதிகளை தேடும் நடவடிக்கையில் பொலிசார் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த கொலைகள் தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருவதாக பொலிஸ் மாஅதிபர் ஏர்னஸ்ட் பெரேரா தெரிவித்தார்.

அமைச்சரவைக்கூட்டத்தின் பின்னர் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில்கலந்து கொண்டு பத்திரிகையாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளிக்கையிலே அவர் இவ்வாறு கூறினர்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள வர்களை நாளாந்தம் 20 பேர் வரையில் விடுதலை செய்யப்பட்டு வருவதாகவும் அவர் கூறினர். (து-சி)


பகவான் சாயியின் வழியை ஊக்குவித்த

ஞானசேகரம் ஐயா

அவர்களின்

**அமரத்துவம்**

திரு. செல்வதுரை ஞானசேகரம் [ஓய்வுபெற்ற உத்தியோகத்தர், வனபரிபாலன இலாகா] அவர்கள் 16-5-90 அன்று அமரத்துவம் எய்தினர். அன்னர் காலஞ்சென்ற எம். எஸ். துரை தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரரும், ராஜலட்சுமியின் அன்புக்கணவரும், திருவாளர்கள் பாலசுப்பிரமணியம், அருள்பிரகாசம் [அவுஸ்திரேலியா] திருமதி ஞானம்பிகை மயில்வாகனம் ஆகியோரின் மூத்த சகோதரரும், கந்தஞானி [பாஹ்ரெயின்] சடாட்சர யோகினி, குகஞானி, பாலயோகினி, குமாரயோகினி [ருகம தனியார் மருத்துவக்கல்லூரி], சண்முகயோகினி [யாழ். பல்கலைக்கழகம், ஆங்கிலத்துறை] ஆகியோரின் அன்புத்தந்தையும், வதனராணி [பாஹ்ரெயின்], குணநாதன் [யாழ்ப்பாணம் மக்கள் வங்கி], ஜெயக்கிருஷ்ணன் [சட்டத்தரணி], ரவீந்திரன் ஆகியோரின் அன்பு மாமனுரும், ஜனகர், மதுசூதனன் ஆகியோரின் அன்புப் பாட்டனருமாவார்.

இறுதிக் கிரியைகள் அன்னரின் கொக்குவில் அச்சுக்கூட ஒழுங்கை இல்லத்தில் நடைபெற்று தகனம் செய்வதற்காக கொக்குவில் மயானத்திற்கு 20-5-90ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 8.00 மணிக்கு எடுத்துச் செல்லப்படும்.

அச்சக ஒழுங்கை,
கொக்குவில்.
[சி3871]

சாயி அடியார்கள்



இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 18-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.